DIGITIZ
-892 N,1
N11

T.N.A. LIBRARY: MENDING SLIP

Author : [illegible]

Title : [illegible]

Acc. No. 8/5737 Year of Publication:

			Pages	Sheets
Preliminary Pages:	to	=		
Main Book :	1 to 76	=	76	38
Supplementary: pages	to	=		
	Total		76	38
Missing pages ( )		=	—	—
Net pages		=	76	38+a+

Date sent for Mending:

Mended by: M. SARANGAPANI

Checked by:

Date of Return:

Lib. Asst/~~A.L.~~

செப்பனிடுவதற்காக எடுத்துக்
கொள்ளப்பட்ட
மாதம் 1989 வருடம்
செப்பனிட்டு முடித்த
மாதம் 1989 வருடம்
ஆராய்ச்சி உதவியாளரின்
கையொப்பம்

582

ஸ்ரீராமஜெயம்.

கம்ச சம்மார நாடகம்.

பண்ரொட்டி சிங்காரசெட்டி பாளையம் - வாத்தியார்
ராஜரத்தின முதலியார் எட்டெப்பிரதியை
சங்கீதவித்வத்துடன் எழுதப்பட்டு
கோ. நா. கிருஷ்ணசாமி செட்டியார்
கேட்டுக்கொண்டபடி
கை. சு. துரைசாமி முதலியார்
சகல சுதந்திரத்துடன்பெற்று

சென்னை-மூர்,
பாலவிர்த்தி போதினி பிரஸில் பதிப்பிக்கப்பட்டது.
1911. [அணா-5.

Registered Copy Right.

உ

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

OFFICE OF THE REGISTRAR 27 NOV 1911 MADRAS

ஸ்ரீ மகா பாகவதத்துள்

கம்சசம்மார நாடகம்.

பண்ரொட்டியைச் சார்ந்த தட்டான்சாவடியிலிருக்கும்
ம-௱-௱-ஸ்ரீ, பெரியதம்பி கவுண்டரவர்கள் குமாரன்
ம-௱-௱-ஸ்ரீ, சின்னசாமி கவுண்டரவர்களால்
கொடுக்கப்பட்ட எட்டுப்பிரதியைக்கொண்டு,

சிங்காரெட்டிபாளையம் ம-௱-௱-ஸ்ரீ,
ப. நாகரத்தின முதலியாரவர்களுடைய
சம்மதிவித்வத்துடன் எழுதி

சகல சுதந்திரத்துடன்

ம-௱-௱-ஸ்ரீ,
கை. சு. துரைசாமி முதலியாரவர்களால்

ஜி. ஆர். பாலைய நாயுடு அவர்களது
சென்னை-சூளை,
பாலவிர்த்தி போதினி பிரஸில் பதிப்பிக்கப்பட்டது.

1911.

விரோதிகிருது ஐப்பசிமீ

Registered Copy Right.

0-1892-M

ரிஜிஸ்டர் அறிவிப்பு.

இதனால் சகலமான அச்சுக்கூடத் தலைவருக்கும், இராமா... பலவித புத்தகவியாபாரிகட்கும் தெரிவிப்பது யாதெனில், (ஸ்ரீ மகா பாகவதத்துள் கம்ச சம்மார நாடகம்) என்கிற இப்புத்தகத்தை 1867-வது வருஷத்திய 25-வது ஆக்டின் 20-வது பிரிவின் 6-வது விதியின்படி கெவர்ன்மெண்டார் அவர்கள் சட்டப்படி காபிரைட் ரிஜிஸ்தர் செய்திருப்பதினால் இதை என்னுடைய உத்திரவில்லாமல் யாரும் அச்சிடக்கூடாது. அப்படி அச்சிடுவோராயில் அதினாலுண்டாகும் நஷ்டத்திற்கும், பினல்கோர்ட் சட்டத்தின் கேள்விக்கும் ஜவாப்புதாரர்களாவார்களென்று இதனால் தெரிவிக்கப்படுகிறது.

இப்படிக்கு,
கைவண்டூர் — ஏ. துரைசாமி முதலியார்.
நெ. 60, அண்ணாபிள்ளை தெரு,
சௌகார்பேட்டை, சென்னை.

85737

உ

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

ஸ்ரீ மகா பாகவதத்துள் கம்ச சம்மார நாடகம்.

விநாயகர் கவி-காட்டை.

அண்டர்கள்முனிவர்போற்றும் அரனருள்புதல்வனை
யெண்டிசையுலகுக்கெல்லாம் யேகமாய்நிரைத்தமூர்த்தி
சண்டிவாகனத்திலேறும் சற்குருகணேசர்தானும்
தண்டைகள்சிலம்புகொஞ்ச சபைதனில்வருகின்றாரே.

வசனம்.

அகோதெப்படியென்றால் பரமேஸ்வரருடைய கெர்ப்ப சுதாகரனாகிய விக்கினேஸ்வரர் வருகிறவிதங்காண்க.

தரு.

ஓங்காரபிரணவத்தில் ஏரும்பிரமமாய்நின்ற
உதித்தக்கணேசர் வந்தார்-இதோ சபையில்
உதித்தக்கணேசர் வந்தார்.

தேங்காயும்வாழையும் தேங்கனிபாலுடன்
பாங்காயமுதுசெய்யும் பார்வதிசுதாகான் (ஓங்)

உண்மையாய்நம்பினர்க்கு ஓங்காரமேயளிப்பார்
ஓரெழுத்திரெழுத் தெட்டெழுத் தஞ்சரியாய் (ஓங்)

அம்பிகைதந்தபாலன் அங்குசபாசமேந்தி
தும்பிமுகமிலங்க தொந்திவயர்குலுங்க (ஓங்)

தேவதேவருக்கெல்லாம் தெரிசனந்தந்தவர்
மேவும்நல்லநகரில் வீற்றிருக்கின்றதேவர் (ஓங்)

வசனம்.

விக்கினேஸ்வரர் வந்தவுடனே கட்டியன்வருகிறவிதங்காண்க

கலி-மோகனம்.

அஷ்டதிக்கெங்கும்கீர்த்தி அதிகமாவலுமைபெற்ற
கட்டளைபடிக்குவந்த கம்சராஜன்வாசல்காரக்கும்
இட்டமாய்செங்கோல்கையில் எடுத்துமேதுடைகள்தட்டி
கட்டியக்காரன்தானும் கனசபைகொலுவில்வந்தான்.

தரு.

வந்தான்விருது கட்டியக்காரன் நல்ல
வரிசையாய்வாள் கத்திக்கேடயமும்பூண்டு (வந்தான்)

சிரசில்சரிகைபாகை மின்ன நல்ல
செர்ணாரத்திலர்தமும் ஜெகஜெகவென்ன (வந்தான்)

அங்கிசாருமே மின்ன நல்ல
அபரஞ்சிக்கேட்டு ஈகாகவென்ன (வந்தான்)

காலில்விருது வெண்டயங்கள் நல்ல
கச்சையிருக்கி யிடுப்பினிலிலங்க (வந்தான்)

தப்பட்டாவுருமாலை தொங்க நல்ல
துப்பாக்கியீட்டியும் கெரிசமுமோங்க (வந்தான்)

ஜெகமேமான உக்கிரசேன் நல்ல
கம்சராஜர்க்குமுன்னேடு அதிகாரசூரன் (வந்தான்)

வசனம்.

அகோதெப்படியென்றால் மதுராபுரிபட்டணத்தை தகத்தோடு பரிபாலனஞ் செய்துவாராநின்ற உக்கிரசேன மகாராஜனுடைய செர்ப்பசுதாகாரனாகிய கம்சமகாராஜன் சபையைநாடி கொலுவுக்கு மந்திரிகளும் வருகிறவிதங்காண்க. எச்சரிக்கை. எச்சரிக்கை. சபையோர்களே.

கலி-கலியாணி.

அதிர்முரசுபேரிடங்கா டமரம்பாட
ஆலவட்டமாதர்களும் கவரிவீச
எதிரெதிர்புலவர்களும் வந்தடிவணங்க
யெந்திலமுயர்மங்களமா லாத்தியேந்த
சதுர்பெருகும்திருமதுரா கொலுவைநாடி
தன்மனதுக்கவலைப் பகைதன்னைமுடிக்க
கதிர்மகுடம்பளபளென்ன செங்கோலேந்தி
கம்சமகாராஜேந்திரன் வருகின்றாரே.

வசனம்.

அகோதெப்படியென்றால் மதுராபுரிபட்டணத்தை தகத்தோடு பரிபாலனஞ் செய்துவாராநின்ற உக்கிரசேன மகாராஜனுடைய செர்ப்பசுதாகாரனாகிய கம்சமகாராஜனும் தனது மந்திரிமார்களும் கொலுவைநாடி வருகிறவிதம் எப்படியென்றால்.

தரு.

இராஜராஜேந்திரன் இராஜன்கம்சமகா ராஜன்கொலுவந்தானே
 உதாரமெம்பிரான் இராஜன்கொலுவந்தானே
 சேனாபதியமந்திரி பிரதானக்கிரையர்
 வெகுவகையுடனே முரசபேரிகையுடன

சருள். நித்தியமங்கள சத்தியவந்தனும்
 யுத்தமன்னரும் பக்திபுரிந்திட (இராஜ)

சங்கும்பதித்தொளிக்கனவார்த்தனம் பதித்திலங்குமுடி சொலிக்கவே
 நவரத்னமன்ன ஜிலுங்குமுடி சொலிக்கவே
 புவனம்புகழ்ம்மனுவை புகழ்செய்கோவிலங்க

சருள். பூங்கிளிமாதர்கள் நாயகியேயுவதிகள்
 ஓங்கியேவீசவும் சாமரங்களை (இராஜ)

பாதசிலம்பொலிடவும் காதிலிட்ட பதக்கம்பளபளென்னவே
 வெகுஜோதியுடனே பதக்கம்பளபளென்னவே
 சிதம்பரமான மார்பினிலங்கிய

சருள். செஞ்சுடர்மணி மின்னிவொளிதர
 கொஞ்சியமாதரும் சந்திரமாக (இராஜ)

தன்னைக்கொல்லவேவந்தவன் ஜனிக்கக்கிருஷ்ணனை தாவியமைக்குடிக்க
 சினங்கொண்டுவேயிட தாவியுமைதடிக்கவே (இவ
 முன்னேகட்டிமாதர் முத்தாரத்தினொளிக்க

சருள். மோகனசல்லாப சேனைகள்சூழவே
 வாரணத்தூர்தி நாளையமன்ன (இராஜ)

தேவாரம்.

அதிபர்மருவியசீர் அகிலபூரணமனைதங்கும்
 சொந்தமயாதியின் நருவை குலத்திற்பெருமானதி
 வேதநாயகநாம் தவக்குமைமதியாதிசர
 மீதினில்வினங்குமரதன் மெல்லடிகமலம்போற்றி.

கலிவிருத்தம்.

தேவகிதேவர்க்குத் திருமணக்கோலஞ்செய்து
 மாயவன்தன்னைப்பற்றி மகிழ்ந்தகாசன்றதம்விடத்த
 தானிந்தப்பெண்ணைவெட்ட சத்தியவசனமும்
 சாற்றவாகாசவாணிசொல்ல சாற்றுதலைகொன்றிடுவேனே.

வசனம்.

அகோகேளுங்கள் மந்திரிமார்களே என் பிதா தேவராஜனுக்குப்பிறந்த தேவகியென்னும் என் தங்கை

மார்கள் போஜகுலராசேனன் ஆதனை வசுதேவருக்குத் திருமணஞ் செய்வித்து ககாபிரதக்ஷிண செய்யும்போது கானென்று அவர்களை ரதத்திலேத்தி நானும் பாகுகனாயிருந்து குதிரைக் கடிவாளத்தைப்பற்றி ரதத்தைசெலுத்தி வருகிறபோது எனக்கு உரியதாகிய தேவகிவயற்றில் பிறக்கும் எட்டாவது பிள்ளை கையாலே மரணப்போரவனுக்கு இந்தப்பரிவேதென்று ஆகாசவாணிச் சொல்லக்கேட்டு திடலென்று உரையிலிருந்த வாளையுருவி தேவகியை வெட்டத்துணிந்தேன் மணக்கோலப்பெண்ணை வெட்டாதகாதென்று பல நீதியுங்காட்டி தேவகியிடமாய் பிறந்துவரும் பிள்ளைகளை தருகிறேன் அதுகளை வெட்டிவிடுமென்று என்று மைத்துனனான வசுதேவன் சொல்ல நான் கோபம் மாறிவந்தேன். இந்தப் பிரகாரமே பிறந்தபிள்ளைகளை வெட்டிப்போட்டு இருவரையும் காவல் வைத்திருக்க எட்டாவது பிள்ளைபிறந்து வசுதேவனாலே கோகுலத்தில் நந்தகோபாலன் மனைவியான அசோதைவீட்டில் சேர்ந்ததாக எனக்கு தெரியவந்தது. அந்த ராமகிருஷ்ணனை கொல்லும்படி தந்திரம்செய்துவந்ததை சொல்லிவருகிறேன் கேளும் மந்திரிமார்களே.

தரு.

 எந்தன்மந்திரிமார்களே யெந்தன்பனைமுடியிலே
 வெகுவிதமான தந்திரமது செய்தேனே.
 அந்தகிருஷ்ணனைகொல்ல அனுப்பினேன்சகடனை

சரு. அரிந்து அவனை கொல்ல தெரிந்துபூதகிதன்னை
 பரிந்து அனுப்பாமல்பாலை உறிந்து அவளைமடிக்க (எந்)

வசனம்.

கோபல்லியில் வளருகின்ற கிருஷ்ணனைகொல்ல சகடாசுரனை யேவினேன் அவனை காலினாலே யுதைத்து மடிக்க அதையறிந்து விஷங்களைப்பூட்டி பூதகியை அனுப்பினேன் அவன் பாலைகுடிக்கும் பாவனையாக உயிராகங்களை உறிந்து பூதகியை மடிக்க ஏது செய்தேனென்றால்,

தரு.

 தேனுகஅரிஷ்டனையும் நானும்அனுப்பியே
 அவர்களைதனித்தனியாக வாலுவகனுப்பிடவே
 கானகத்துமேவாடி நல்லக்கேசனையேவி

சரு. காடியேஇடப்பசங்கள் காதெரிவேகண்டு
 வாடும்படி வந்தக்க கேடுசெள்கண்டேனே (எந்)

வசனம்.

பூதகி மடிந்தபிறகு தேவகாசூரன் அரிஷ்டாசூரனை யேவினேன் அவர்களை மடிந்ததைக் கண்டு கேசாசூரனை யேவினேன் அவனை யும் கானகத்தில் ஆடு மாடு மேய்த்திருக்கும் இடைக்கிருஷ்ணன் கொன்றதாக தெரியவந்தது மந்திரிமார்களே.

தரு.

வெகுதந்திரங்கள்செய்துமே சிறுபயலைக்கொல்ல
வென்கையிலாகாமலேதருமோ நான்மனம்வாடவே
என்கைஜெகமெங்கும்கொடிபெத்து நிரம்பெத்திருக்கென்று.

சருள். ஜெயமடையாமலே புயபலமடங்கியே
நயமுறுங்காலமும் அபாமுண்டாச்சே (வெகு)

ஒப்பில்லாக்கீர்த்தியெடுக்க ஒருசூழ்ச்சித்தந்திரம்
ஆகுதியைக்கொண்டு இப்போதுபகைமுடிக்க
தப்பாமல்நிரமெண்ணி தரித்தேன்கங்கணங்கையில்

சருள், தல்விகளாகிய மெல்லியபசங்களை
கொல்லவும் தந்திரம் சொல்லவும் மீறியே (வெகு)

வசனம்.

அகோகேளும் எனது மந்திரிமார்களே இதுகாலம் செய்து வந்த தந்திரங்களுக்கு மடியாமல் தப்பித்துக்கொண்ட ராமகிருஷ் ணனை யெவ்விதத்தில் மடிக்கலாம் ஒருயோசனை புரிந்து சொல்லுங் கள் மந்திரிமார்களே.

கவி-நாதநாமக்கிரியை.

பிள்ளைகளதனைமடிக்க பிரபலமாகவெண்ணி
உள்ளமுங்கலங்கலாமோ ஒருவிதநன்மைகாட்டி
மெள்ளவேவரவழைத்து வீரமல்லரைவிடுத்து
கள்ளயுத்தத்தினாலே காலனூரனுப்பலாமே.

வசனம்.

அகோ கேளுமையா மகாராஜனே சிறு பிள்ளைதனை கொல்ல பிரபசித்து உள்ளங் கலங்குவதழகல்ல நமதுபட்டணத்தில் வில்லின் திருவிழாவென்று சூதாகவாளனுப்பி அவர்களை இவ்விடம் வரச் செய்து முஷ்டிகனைவிட்டு யெறுக்கச்செய்தால் எமலோகஞ் சேர் வார் மகாராஜனே.

தரு.

இளையவயதாடைய இடைக்கிருஷ்ணனைமடிக்க
இதுவேதந்திரமந்திரி இஷ்டமழைத்துமே தக்ஷணம்கொல்ல

பிதா-வளையாவில்லைவளைத்து மகிழும்சிவன்பிறக்க
வல்லமைகொடுப்பேன் சொன்னசொல்லையும்முடிப்பேன்

சருள். அல்லதாயேகியே நல்லதாகண்டேன்
மல்லரையாண்டவும் வல்லமைகொண்டேன் (இளை)

சுற்றுவதுமஞ்சாமல் தயிர்பால்வெண்ணெய்த்திருடி
மத்தாலடியும்பட்ட மாயக்கிருஷ்ணன்தனக்கு
மானமுமுண்டோசாதி யீனமுமுண்டோ

சருள். கானகமெங்குமே கொள்ளுமாடுகள்
தானவர்மேய்த்திடும் சாணவனோ (இளை)

நதிக்குளிக்கும்பெண்கள் சேலைதிருடுங்கள்ளன்
யெதிரியெனக்காவானோ யிப்போதேதனைக்கொல்ல
எதிர்த்திடுவானோ மீறிவதைத்திடுவானோ

சருள். குதித்திடுமவர்களை சதைத்துமேயாவரும்
புதைத்திடப்பூமியில் புதைத்திடவெண்ணி (இளை)

மோசக்குவலயத்தில்வந்து பொருந்துமிடையனென்று
பேசஉடம்பெடுத்து பெரியதனம்படைத்து
பெண்டுகள்பேசகொஞ்சங் கண்டவர்யேச

சருள். என்றுமேநாட்டிலே கன்றுகள்மேய்த்திட
நின்றவன்பகையாற் றின்றுமுடிக்கவே (இளை)

கவி.

பக்குவமாய்த்துரைத்த பரிவுள்ளமந்திரிமாரே
சிக்கெனவரவழைத்து சின்னவரதனைமடிக்க
மிக்கவேயெனக்குகந்த விளக்கியேநோமுறுனை
அக்குருவர்தன்னையிங்கே அழைத்தோடிவருகுவீரே.

வசனம்.

அகோவாரும் மந்திரிமார்களே நீங்கள் எடுத்துக்காட்டிய தந் திரப்படி அந்த இடைப்பிள்ளைகளை இவ்விடம் வரவழைக்க அக்குரு வரை அழைத்துவாருங்கள் மந்திரிமார்களே.

அக்குருவர்-கவி.

வந்திடகம்சராஜன் மகிழ்ந்தழைத்தசேதி
தந்திடதூதர்வந்து சபைக்கெனவெழுந்திருந்து
கந்தமும்பரிமளிக்க கமுசனைக்காணவேண்டி
அந்தணர்மகிழ்வோடு அக்குருவர்வருகின்றாரே.

வசனம்.

அதேதெப்படியென்றால் காசிப்பட்டணம் பரிபாலனஞ் செய்துவாரநின்ற காசிராஜனுடைய குமாரத்தியாகிய காந்தனிக்கும் ஸ்வாபத்தனுக்கும் பிறந்த அக்குருவர் வருகிறவிதங்காண்க.

தரு-மோகனம்.

ஆசைமிகுந்தகமுசன் ராஜன்சமுகம்நாடி அக்குருவர்வந்துமேவினார்
வேடிக்கையாக அக்குருவர்வந்துமேவினார்
காசிராஜன் அளித்த காந்தனி அருள்பாலன்

சுருள். கல்வியிலுயர்கிய செல்வசிகாமணி
நல்வினைதீவினை சொல்மொழிதவரா (ஆசை)

தங்கக்கடகங்கையில் தகதகென்று இலங்க
தங்கமணிப்பதக்கம் சோதிமிஞ்சிருங்க

சுருள். சுந்தரம்பெருகிய கந்தமும்பரிமளம்
சந்தனம்வீசவே விந்தையதாக (ஆசை)

சதுர்வேதசாஸ்திரமும் தந்துவகலைக்கியானமும்
எதிரில்லாமலுணர்ந்து இன்பக்குணமும்ஞானம்

சுருள். யெவர்களுமதித்திட தவறில்லாக்குலமணி
நவனிவனென்றுமே குவலயம்புகழ (ஆசை)

தழைத்தகம்சராஜன் சந்தோஷமாக
அழைத்தவிபரம்தன்னை அடுத்து அறிவோமென்றால்

சுருள். ஆவல்மிகுந்துமே தாவிநகத்திலே
யாவரும்மெச்சவே மேவியேசபையில் (ஆசை)

கவி.

தேசமன்னவர்வணங்கும் நீரயின்புறகெம்பீரா
இராஜனேயென்னையழைத்த மன்மையை அறிவிப்பீரே.

இராஜா-கவி.

பாசமாகியுமிப்போவந்திடப் புஜம்பூரித்தேன்
நேசமாய்அழைத்தசேதி நிகழ்த்துவேன்மகிழ்ந்திடீரே.

அக்குருவர்-வசனம்.

உலகர்வேந்தர் வணங்கும் திருவடியுடைய கம்சவரசே. நம்மை அழைத்தவிதம் இன்னதென்று சொல்லும் ராஜனே.

கம்சன்-வசனம்.

தேவரீரையான் அழைத்தபோதே யாதொரு தடையில்லாமல் வந்தபோது யெனது இருபுஜமும் பூரித்தேன் யெனது கவலை தீர்ந்தேன் உன்னை அழைத்த விபரத்தைச் சொல்லுகிறேன் கேளும் ஞான சிரோன்மணியே.

இராஜா-தரு-நாதநாமக்கிரியை.

வந்தஅக்ரூரவரே அந்தரங்கத்தைச்சொல்ல
மருசினேகித ரெனக்கில்லை
எந்தன்சமுகந்தன்னை உங்களைநான்காண
இனிமேலொன்றும் அபயமில்லை

அக்ரூரவர்-தரு.

இல்லையென்றுசொல்லி யென்னைவரவழைத்து
இன்பமேலாகநான் நல்லமனதாக
நடத்தும்காரியத்தை நயந்தும்
கூறவீரத்தை விள்ளவே

இராஜா-தரு.

கூறுவேன்நான்பின்னே கூடியிருக்கமனம்
கொண்டேன்கொண்டேன் யின்பமானே
வாரும்வாருமிந்த மணிசிங்காதனமேறி
மகிழ்ந்துவா அஸ்தம்தந்தேனே

அக்குருவர்-தரு.

கரமதைநான்பதறி காணவேசபையோர்கள்
கனகாசனத்திலேறினேனே
உறவாடியிருவரும் ஒருமிக்கயிருந்தோமே
உண்மையறியத் தேறினேனே

இராஜா-கவி.

செப்புமாதவரைப்போலும்சிறந்த சினேகிதனேகேளும்
தப்பியேயென்சொல்லுக்கு தடைமீறிநடந்ததில்லை
இப்போதுநடப்பதொன்று யெனக்குநினைத்ததாலே
ஒப்பியேவந்ததுக்கு உண்மையைத்தெரிவிப்பேனே.

வசனம்.

அகேக்கேளும் உயிருக்குஉயிராயிராநின்ற சினேகிதரேயிதுகாலம் எனதுகட்டளைகடந்துநடந்ததில்லை அதுபோலவே இப்போது

நடப்பேனென்று யெனக்கு கையோட்டு தந்தால் உம்மை அழைத்த சங்கதியை இன்னதென்று வெளிப்படுத்துவேன் அக்குருவரே.

அக்குருவர்-தரு-தோடி.

இந்தவசனம்பேச ஞாயமோயிது ஞாயமோ
சேர்க்காதுநல்ல சகாயமோசமோசாயமோ
சந்தோஷமாகவே கூருவாயதைகூருவாய்
தப்பாமல்நடக்குமேன் தேருவாய்மனம்தேறுவாய்.

இராஜா-தரு.

தேருவேன்சைப்போட வல்லவாயென்மேல்வல்லவா
சிந்தைவைத்திடும்போது நல்லவா இதுநல்லவா
கூருவேன்கெதிவேரே யில்லையேசொல்லவில்லையே
கொஞ்சமும்யென்மனம் வல்லையேமனம்வல்லையே.

அக்குருவர்-தரு.

வல்லவாயிதுவென்ன காரணம்சொல்லுங்காரணம்
வஞ்சகமோ பரிபூரணம்பரிபூரணம்
சொல்லுவாய்கான்கிட்டி வந்தேனே அன்பாய்வந்தேனே
தாக்கியே கைபோட்டுத்தந்தேனே அன்பாய்தந்தேனே.

இராஜா-தரு.

தந்தபோதுஜெயங்கொண்டேனே இன்பங்கொண்டேனே
சந்தோஷத்திரியங்கொண்டேனே அன்பாய்கொண்டேனே
எந்தன்குறையைச்சொல்ல நேரமோயிதுநேரமோ
இரங்கிடப்பது நாதன்பாருமோநாதன்பாருமே.

இராகம்-கலி-கல்யாணி.

அந்தநாள்வாணிசொல்ல அவ்விதராமகிருஷ்ணன்
வந்தநாளாககாணும்மடிக்கவே அவரையெண்ணி
எந்தனுலானதந்திரம் யெனினதெல்லாம்பாழாய்
கொந்தனன் அவரையிங்கே கொடியவில்அழைத்துவாராய்.

வசனம்.

கேளும் அக்குருவரே யெனது தங்கை மணக்கோலகாலத்தில் ஆகாயவாணி சொல்லியபடி ராமகிருஷ்ணனைக் கொல்ல அனேக தந்திரம் செய்தேன் அதற்குத் தப்பித்துக்கொண்டார் நானோயிதச மியில் வில்லுத் திருவிழாவென்றும் ஞூதாக அழைத்து கொல்லும் படி யோசித்திருக்கிறேன் நீர் அதிக சீக்கிரமாகச்சென்று ராமக் கிருஷ்ணனை தந்திரமாக அழைத்துவாரும் அக்குருவரே.

அக்குருவர்-தரு.

என்னைதானுபோகச்சொன்னீர்யிது உனக்குதர்மந்தானோ
அன்னைபிதா வையவாரே ஓ ராஜதீரா
அழைக்கமனம் நானுதுணியேனே ஓ ராஜதீரா

கம்சன்-தரு

துணியவேணும்யெந்தனுக்கு தோழனென்றுபேர்படைத்தாய்
அனியாயமென்று சொல்லியே ஓ அக்குரூரா
ஆகாதென்று சொல்லியே ஓ அக்குரூரா

அக்குருவர்-தரு.

போகத்தானுவேநேரவிட்டால் பூரித்தானுமேசென்று
ஆருங்காரியத்தை தேடியே ஓ ராஜதீரா
அதைகேட்பேன் உண்மையாதுவாகமே ஓ ராஜதீரா

கம்சன்-தரு.

உண்மையானபேரெனக்கு உன்னைவிடவேரேயின்னம்
தன்மையான பேரில்லையே ஓ அக்குருவரே
ரதமும்தந்தேன் யேறியேவருவாய் ஓ அக்குருவரே

அக்குருவர்-கவி.

உம்மிடமனவிரோதம் வொருக்காலும்முதகாதென்று
எம்மனம்துணிந்தேன் அன்பாயிந்ததோர் ரதத்திலேரி
செம்மையாய் ஆயர்பாடிஇருவர்கள்தனை அழைத்து
கம்மென வசப்படுத்திகடுகியே வருகுவேனே.

வசனம்.

கேளும் கம்சமகாராஜனே உமது யிட்டவிரோதம் யெப்போதும் உதவாதென்று மனத்துணிந்தேன் தாங்கள் தந்த ரதமேறி ஆயர்பாடிசென்று கிருஷ்ணனை அழைத்து வருகிறேன் கம்ச ராஜனே.

பொது-வசனம்.

இவ்விதமாக அக்குருவர் கம்சமகாராஜனிடத்தில் விடைபெற்றுக்கொண்டு தனது அரண்மனையைச்சேர அந்தசமயத்தில் கம்ச ராஜன் தேவிமாராகிய அசூத்தி பிராசத்தியென்று சொல்லப்படா நின்ற இரண்டு தேவிமார்களும் அரசனை காணவருகிற விதங் காண்க.

அக்ஷத்தி-கவி.

உன்னிதநடைநடந்து ஒளியணிஅலங்கரித்து
தன்னிகரில்லாரூபி சராசந்தன்மகிழுஞ்செல்வி
கன்னியர்நெருக்கிச்சூழ கம்சனைகாணவேண்டி
மின்னியேஅக்ஷத்திபிராசத்தி மெல்லியர்வருகின்றாளே.

தரு.

ஆசையான கம்சராஜன்தேவிவந்தாள் அக்ஷத்தி பிராசத்திவராள்
அஞ்சியே மிகுந்தவஞ்சியர்சூழ அக்ஷத்தி பிராசத்தி

சுருள். தேசமெங்கும்பிரதாபி திருவுரும் ஒய்யாரி
திருமுருபெருகொள நினைமிகபெருகிட (ஆசையா)

சிருத்தயிடையில்சேலை திகழும்சரிகைமின்ன
தரித்தவொட்டியாணங்கள் தகதகவென்றிலங்க

சுருள். சந்தனம்பன்னீர் கந்தமும்புனைந்த
விந்தையில்திவிர்த சுந்தரரூபி (ஆசையா)

கெண்டையனமாதர் கிரணப்பணிகள்மின்ன
தண்டைசதங்கைகாலில் தாவிநடைநடந்து

சுருள். தவறில்லாதயன்னி யெவர்களும்மெச்சிட
குவலயமன்னரும் கூடிகளித்திட (ஆசையா)

சண்டப்பிரசண்டனை சராசந்தனுமீந்த
எண்டிசைபுவனமும் யெல்லவரும்களிக்க

சுருள். எண்ணியேகணவனும் பண்ணியோகாண
வண்ணமுமகிழ்ந்துமே குண்ணியேமனது (ஆசையா)

அக்ஷத்தி-கவி-ஆனந்தபைரவி.

தங்கையேநாமுமிந்த சமுஸ்தானந்தன்னில்வந்து
சங்கரன்தயவினாலே தாழ்வில்லாச்செல்வம்பெற்று
மங்களமாகவாழ்ந்தோம மணவாளன்தன்னுளின்று
அங்கமும்துடிதுடிக்க அருந்துயராகிறேனே.

வசனம்.

கேளும் யென்று மனமுள்ள தங்கையே நாமிருவரும் சரா சந்த மகாராஜனுக்கு மகளாகப் பிறந்து இந்த சமுஸ்தானத்துக்கு வந்து தேவரீரைப்போலே வாழ்ந்துவந்தோம் இப்போது நமது சிவபத்தாவானவர் செய்திருக்கும் யோசனைக்கு மனம் திடுக்கிட்டு மனம் நடுக்குதே இதற்கென்ன செய்யலாம் தங்கையே.

பிராசத்தி-கவி-மத்தியமாவதி.

தயவுள்ளவெனது அக்கா தலைதனிற்பிடித்தாப்போலே
பயமுருசேதியென்ன பித்தாரம்செயித்திருக்கும்
நயகுணவதியேநீயும நடுங்கியேவாடவந்த
செய்வதையின்னதென்று சீக்கிரமாயுரைசெய்வாயே.

வசனம்.

கேளும் யெனது தங்கையே யிருந்தாப்போல் யிருந்து திடுக்கிட்டு மனம்வாடி முகம்சோர்ந்து யிருப்பதென்று நமது பத்தாவானவர் யென்ன யோசனை செய்தார் அதையும் விபரமாக சொல்லும் தங்கையே.

தரு.

அருமையக்கசகோதரியே அம்மரான்யென்னசெய்குவேன்
பெருமையானநமதுபத்தா மர்மமாகவே

சுருள். பெரியயோசனை யெண்ணிமாவே
வெரியில்நின்றுமே தேடலாகுமோ (அருமையான)

பிராசத்தி-தரு.

தேடரியவந்ததென்று சொல்லாயீமக்கையே
நாடரியநமதுபத்தா நவிலுஞ்சேதியே

சுருள். நாதனிப்படி செய்வதென்றுமே
போதுமெனக்கினி மானபங்கங்கொண்டுமே (தேடரிய)

அஸ்த்தி-தரு.

கொண்டுபோகராமகிருஷ்ணனை கொல்லவெண்ணியே
துண்டர்க்குரூரர்தம்மை துணிந்தாயேவியே
சுருள். குரூரத்துமே வந்துசேர்ந்துமே
வீரமத்துமேநீ பிந்துவந்திட (கொண்டு)

பிராப்த்தி-தரு.

பிந்திவந்தாயென்றுசொல்லி பேசுந்தமக்கையே
அந்தரத்தில்மாமுளைத்த அதிசயங்களை
சுருள். அரியவந்தேனே அன்புதோணவே
தெரியவுரைசெய்வாய் பின்புகாணவே (பிந்திவந்தா)

அஸ்த்தி-கவி-தோடி.

பெரியமாயமதுராத்தி பெற்றபிள்ளைகள்தம்மை
உருதியாய்குரூரர்தன்னால் வொருவன்கைசெய்யவேண்டி
தெரியவந்திருக்குதிப்போ இருவர்கள்தமையழைத்து
பிரிந்தியோராமும்சென்று நமதுபத்தாவைகாணுவோமே.

வசனம்.

கேளும்மென்று தங்கையே நமதுசாத்தியான தேவகியம்மன் பெற்ற பிள்ளைகளாகிய ராமகிருஷ்ணாளை ரேப்பல்லேயில் வளருகின் றவரை நமது பர்த்தாவானவர் காலையதினம் கொல்லயெத்தனித்து யிருக்கிறாராம் நாம் அவரிடம் சென்று அவர்கோபத்தை பார்த்து வருவோம் மென்று தங்கையே.

அஸ்த்தி-தரு.

சரணம்நாதாசரணம்நாதா தயவிலேக்கேயான்சரணம்
கருணைசெய்துயாளுகின்ற காதமிருக்கிரமே
நீதிமன்னர்மன்னரெல்லாம் கேசமாகவந்தருளு
சோதிமாமகுடம்பூண்ட சக்கிரராயான்சரணம்.

வசனம்.

சரணம் சரணம் மென்று பிராண நாயகரே தேவரீர் பாதா விந்தங்களுக்கு நிர்க்க வந்தனம் வந்தனம் சுவாமி.

கம்சன்-வசனம்.

கேளும்பெண்ணே பிராணநாயகி நீ வந்ததேயுண்டானால் ம ராஜியாய் வாழ்க்கடவது நீ யிவ்விடம் வந்தசங்கதியை யின்ன தென்று சொல்லும் பிராணநாயகி.

அஸ்த்தி-தரு.

சுந்தாதோளா வந்ததைக்கேளும்
நலங்கும்படிக்கி அன்பாய்த்தாதேவி
தந்திரமாகவந்திட்டேனுகதடுத்து ராமகிருஷ்ணன்தனைகொல்ல
சுருள். சரியோயோசனை செரியாய்செய்வது
தாளும்தாளுமிது மீளும்மீளவும்வேண்டாம் (சுந்தா)

கம்சன்-தரு.

அன்னமேபோடிநீ யென்னிடம்சாடி
அந்தராமகிருஷ்ணன்மேல்பரிவாகி பண்ணவும்போமோபாதைத்
பார்க்கொலுவைகாடி வரலாமோபெண்ணே [திடலாமோ
சுருள். பலமாயோசனை நலமாயெண்ணியே
பத்தியாய்வந்தாயோ புத்தியைச்சொல்லி (அன்னமே)

அஸ்த்தி-தரு.

குதகனொடுத்ததீ நாதுகள்விடுத்து
சொல்லும்கன்மையை காட்டிபாராட்டி
நீதுகளறிய பேதகம்தெரிய
இருவனை அழைத்திங்கேகுலைசெய்ய
சுருள். தேசமுமறியவே யோசனைசெய்வது
திடுக்கிட்டுனக்கிது அடுக்காதுமன்னா (குத)

கம்சன்-தரு.

பகையமர்முளைக்க பலகிளைகிளைக்க
பார்க்கலாமோ முளையைக்கிள்ளாமல்
வகையுள்ளவேரை வைப்பனோபேதை
மடிக்கத்தந்திரம் யாதும்செய்யாமல்
சுருள். வல்லவனுகியே கொல்லுவேன்பிள்ளையை
வதைக்கவேபாதகம் யெதுக்குமஞ்சேனே (பகைய)

அஸ்த்தி-கவி.

தடுக்கிலேயிருக்கும்போது சகடனையுதைத்துகொல்ல
விடுத்தபூதகிதன்பால் விரும்பியேபருகித்தாரென்று
கெடுக்கவேவிடுத்தபேரை கேவலம்செய்திருக்க
ஒடுக்கவேகிருஷ்ணன்தன்னை ஒருவரும்ஜெயிப்பதுண்டோ.

வசனம்.

கேளும்மென்பிராணநாயகா அந்த கிருஷ்ணன்பிறந்து தடுக் குழந்தையா யிருக்கும்போது நீ யேவிய சகடாசூரனையும் அரிஷ்

சருள். குணனிவேமக்கு வண்ணமூர்த்திட
எண்ணியேபோந்தேன் கண்ணேயெமயாளா (நேச)

கமுசன்-தரு.

வஞ்சியேயெனக்குப்பக்தி கொஞ்சியேசேர்வந்தாய்
மார்க்கமோ விதியேர்க்குமோ
சஞ்சலம்வருமென்றெண்ணி அஞ்சிமேயங்கேவேண்டாம்
தங்கமே சோதிதங்கமே
சருள். சத்துருபயமே பத்திரமாய்நண்டுமே
எத்தடன்கொண்டுமே நித்தியஞ்சுதுவேன் (வஞ்சி)

பிராசக்தி-தரு.

நித்தியமாயவர்களுக்கு சத்தியமாகட்டுக்க
கேர்மையும் அவர்சர்வமையும்
புத்தியில் அறிக்கிடாமல் வெறுப்செய்யவிரமெண்ணி
யோசனே விசுவாசனே
சருள். பெட்டெனவுவர்களை பிட்டவழைத்திடும்
கட்டளைக்கு தைரிய விட்டுவெமவுறு (நித்திய)

கமுசன்-தரு.

விட்டுவிடுமென் அதைசால்லி வெட்டியாகபேசுகின்ற
வீரமும் அவர்கள் வீரமும்
கெட்டுமுறிக்கோட்டெண்டால் தட்டிநான்வெறிக்கிடவே
கேளடி வந்தகாளடி
சருள். கிள்ளியெறிந்திடும் பிள்ளைகளென்றுமே
உள்ளமரிக்கவே விள்ளுவேசொன்னேன் (விட்டு)

பிராசக்தி-கவி.

கிள்ளியெறியேவென்று வெம்பிரோஷமின்ன
பிள்ளையும்சகட்டையாகி பெரியஅசுரனையுண்ணும்
உள்ளவீரியத்தைக்கண்டு யோசித்தப்பார்த்திடாமல்
துள்ளியேகோபம்கொள்ளும் குற்றத்தையறியலேனே.

வசனம்.

கேளும் வெறு பிராணநாயகா அந்த சிறு பாலகனுகிய கிருஷ்ணனை தூக்கில் கிடத்தி யிருக்கும்போது நீர் யேவிய சகடாசுரனையும்மடித்து பூதகி உதிரமாம்சமும் குடித்து வதைத்திருக்க இரண்டு மருதமரங்களையும் சாய்த்து காளியின்மீது கூத்தாடியும் யின்னும் அனேக பலசாலிகளைக்கொன்ற ஜெகநாதனென்று யோசியாமல் நீர் நினைப்பது சரியல்ல வென் பிராணநாயகரே.

கம்சன்-தரு.

மாயவனவனென்றால் யென்னடிபெண்ணேயென்று
மத்தாலடிப்பட்ட கள்ளனடி அவன் கள்ளனடி
யாதவன்தொழில்கொண்டு ஆடுமாடுகள்மேய்த்து
அள்ளித்தயிர்பால் உண்டகள்ளனென்பதுபொய்யோ (மாய)

பிராசக்தி-தரு.

பெய்யைமெய்யாகவே சாத்துவேன் அதைசாத்துவேன்
பூரித்துசொல்வதெல்லாம் மாத்தவே அதைமாத்தவே
கையில்கனியைப்போலும் காட்டிப்பலீதியும்
கடிந்துபேசவும்மக்கு முடிந்ததிதிதுவோ (பொய்யை)

கம்சன்-தரு.

இதுவிதியோவென்று தையலே நீங்கள்தையலே
எதிர்த்துபேசவதென்ன தையலேயடிதையலே
அதுவுனக்குத்தகாது அறிந்தேயவர்தன்புத்தியை
அரசனென்றெண்ணாமல் சாசம்பேசுவதென்னதேவி (இது)

பிராசக்தி-தரு.

பேசும்வார்த்தையாலென்ன குத்தமோசொல்லுங்குத்தமோ
பிள்ளைகளைமடிக்க உத்தமாமனதுசித்தமா
நேசமாகயிரண்டு நிருதக்கன்றாயிருந்து
தினவையறிந்துவிளாங்கனியை அடித்தகிருஷ்ணன் (பேசும்)

வசனம்.

கேளும் வெனது பிராணநாயகரே நாம் கிருஷ்ணனை கொல்லும்படி இரண்டு ராக்ஷதரை அனுப்ப கன்றுகன்றாய் உருக்கொண்டு இருப்பது அறிந்து இரண்டு கன்றுகளைபற்றி காகாவென்று சுழட்டி விளாங்கனியில் உதிரம்வீசி அடித்திருப்பதை அறிந்து அவர்களை யெதிர்ப்பது சரியல்ல சுவாமி.

கம்சன்-கந்தார்த்தம்-மோகனம்.

யேவியேபேசைக்கொன்றால் யென்னையுங்கொல்லவதுண்டோ
மேவியேபதைமுடிக்க விருதுகயைக்கைத்தரித்தேன்
காவியேயுன்சொல்லைக்கேட்டு தடையில்படுவேதோ
ஆவியும் பதரவேண்டாம்.

தரு.

அப்புறம்போடி அவனைக்கொல்ல இப்பவேசாடி
தப்பாமல்கொல்லவும் தைரியமெனக்குண்டு
செப்பாதேயெனக்கு தைரியம்சொன்னதுபோதும் (அப்)

பிராசந்தி-கந்தார்த்தம்-மோகனம்.

முன்னாலேவெகுபேர்சொன்ன மொழிகேளாதமாண்டான்
என்றாலேதெரிந்துசொல்லும் பேர்க்காதுபோதுமின்னம்
சொன்னாலும்அறிவதேது தோகையாள்சொல்லும்வார்த்தை
பின்னாலே தெரியப்போரீர்.

தரு.

பிரசண்டநிரூபிள்ளைகளென்று தெரிகொண்டமாறு
பிள்ளைகளென்று கடிகொண்ட சிங்கத்தை சட்சிவாவலமுத்து
காரியம்போலவே வீரியம்செலுத்து (பிர.ச)

வசனம்.

கேளும் யெனது பிராணநாயகா முன்னாலே இரணியன், ராவணன் முதலான அனேக பலசாலிகள் மடிந்து தெரிந்திருக்கும் இப்போது தேவரீர் மனதுபோலே நடத்திக்கொள்ளும் நான் அரண்மனைபோய் சேருகிறேன் நாதா.

பொது வசனம்.

இப்படியாக கமுசராஜன் தேவிமார் அரண்மனைபோய்ச்சேர அக்குருவர் ரதமேறி ரேப்பல்லிநாடி போவது.

அக்குருவர் தரு.

மனமதுகளித்துமேரதமதிலேறியே மாயவன்பதம்கோரினேன்
தனதுபகைமுடிக்ககமுசாசனளித்த தக்காதத்திலேறிவேன
கண்டுமென்சுவாமியை கனகசுகமடையவே
கதரிப்பரிகள்நடக்க பவுரிப்பரிகளைப்போலே
புஜபலங்காட்டியே பரிவாரதத்தைமுடுக்க
மதுரையிநிலையைவிட்டுமோகனர்தன்னைநாடி வந்தேன்மனதுதேறியே
குதிரைகாலநிவேகங்கொண்டுகடந்திட கூசாமலேறினேனே
தேசதேசம்தாண்டி தேவர்தேவர்பாதம் தேடியோடநடந்தேன்
நேசமாகராம கிருஷ்ணனைவணங்கிடும்
ரேப்பல்லித்தான் நடந்தேன் (மனமது)

வசனம்.

அதெப்படியென்றால் அதனுனவர் ரேப்பல்லியில் நாடிவந்து பகவானை துதிக்கிற விதங்காண்க.

கட்டளைக்களிப்பா-தரு.

அரிகரிநாராயணா கோவிந்தாமுகுந்தா
அருள்தாவந்து யேழைநாளும்
கரியந்துயர்த்தீர்த்த காளிங்கநடனனே
செங்கையுரும்செங்கை மலர்ப்பொற்பாதனே

சோமுகசம்மாரா சோதிப்பிரகாசனே
சாமளவர்ணனேசுவாமி யென்முன்வாராயே.
பன்னகமீதில்பவுந்திடும் ஆதியே
என்னெதிர்காண யீடில்லாசோதியே
கம்சன்கடுஞ்சொல்லை கைகொண்டுவந்தேனே
அஞ்சலென்றெந்தனை ஆதரிப்பேனே.

பொது-வசனம்.

அகோதெப்படியென்றால் அக்குருவானவர் அன்புடன் அடங்கி அரியென்னும் அக்ஷரத்தை துதித்த மாத்திரத்தில் பகவானாகிய கிருஷ்ணமூர்த்தி கொலுவுக்கு வருகிற விதங்காண்க.

கிருஷ்ணமூர்த்தி-கலி.

கம்சனும்விடுத்தானது கருதியேவிதமறிந்து
நெஞ்சமும்களிக்குமிக்க நீலொளிபணிகள்மின்ன
பஞ்சடர்வடிவுதான மகிலபுருதமையனோடு
செஞ்சிலம்பசையகிருஷ்ணன் தேவரும்வருகின்றாரே.

தரு.

ஆதிமூலாதார சோதிக்கருணாகர
அரிகிருஷ்ணதேவர்வந்தார் இவ்வுலகினில்
அதிபலராமருங்கூடி அரிகிருஷ்ணதேவர்வந்தார்
நிதிமகுடம்மீண்டப் புவிமன்னர்கள்
கேசமாயரியவந்து பூசைகள்புரிய
வாசனும்மலர் கொண்டுவணங்கிட
கேசவனேருமே ரிஷிகள்வணங்கிட (ஆதிமூலா)

நெத்திபொட்டுகள்மின்ன முத்துகள்பளபளென்ன
நீலமேனியுமிலங்க திருமார்பினிலிலங்கிய
கோலமணிகள்துலங்க திருமார்பினிலிலங்கிய
பக்தி[illegible] பாதந்தன்னிடைகள்கொஞ்ச
பாரெல்லாமுண்டபுரியை நாடிக்கொண்ட

தரு. மாமனையின்பமாய் வந்திடத்தவர்
நிறைஅதமதாய் செய்யவேந்தவர் (ஆதிமூலா)

ஆனைத்தக்கடலாடி அண்ணன்தம்பிமார்கூடி
அக்கிரமத்தோரை தேடியே
நல்லவெகுவிதகஷ்டவர் நிக்கிரகங்களாடியே
வானத்தினிலளவும் மலையைக்குடைபிடித்து
வல்லவரென்னையக்க கல்லவர்அன்ன

சரு. சொல்லியபூதகி தன்னையும் மடித்தவர்
கொல்லவந்திடும்பேரை மடித்தவர் (ஆதிமூல)

கோலியவன்னகரம் சாலியர்கிருபேசன்
குலவும் ரங்கைபர்களிக்க
இந்தவுலகினில்உதித்தவர் வேமாவேதங்கள்படிக்க
பாலக்கிருஷ்ணசுவாமியை பாடிக்கவிவாணர்கள்
பங்கயகண்ணன் மேவிய

சரு. தங்கியவண்ணன்சக்கிரி சோதரா்ரடியசேன்
மங்களமாடியே வளருமுல்லாசன் (ஆதிமூல)

வசனம்.

அகோதெப்படியென்றால் அக்குருவானவர் பகவானைத் துதிப்பது

அக்குருவர்-தேவாரம்.

அச்சுதானந்தாபோற்றி அமலகாரணனேபோற்றி
சச்சிதானந்தாபோற்றி தயாநிதியடியேன்செய்யும்
உச்சிதவிண்ணப்பத்தை யுகந்தருள்புரிந்தாயிந்த
இச்சைவைத்தேழையி தென்போதாரகூறிய்யிரே.

வசனம்.

அரிகரி ஸ்ரீமன்னாராயணா அகிலாண்டகோடி பிரம்மாண்டநாயகா அடியேன் விண்ணப்பத்தை அங்கீகரித்து யென்னை ரக்ஷிக்க வேணும் பகவானே.

கிருஷ்ணன்-கலி.

கல்லரிவாசகரானந்தர் மையற்றக்கொண்டு
சொல்லியேபணிக்கின்ற தாய்மனமிக்காவாறு
இல்லாம்தன்னைவிட்டு மின்றுவந்தென்னறிந்தி
பலவொளிவதனஅன்பரம் பகருவீர்அறியத்தானே.

வசனம்.

கல்லரியோடு காலமத்தவமும் உரைத்த அக்குருவரே நீர் மதுராபுரியைவிட்டு வெள்ளிடம் வருமாரைக்காரியங்களை இவன் தென்று வெளவ்வாம் ஸ்ரீயாரும் சொன்னும் அக்குருவரே.

அக்குருவர்-கரு.

என்னசொல்வேன்கோதண்டசோரனே ஆதிமாதவா
எப்படி நானிதுசொல்வேன் வெவ்வினைமாதவா
சந்தோஷமாய்உன்மாமன் ஆதிமாதவா
தனுசுதிருவிழாவென் றமைமாய்த்தானிக்குமே
ஆசையாகநீக்கள்பார்க்க ஆதிமாதவா
அன்புடனேவரவழைக்க யின்புறாகியே

கொல்லமனம்கொண்டவரால் ஆதிமாதவா
கூறினதனுப்பவந்தேன் வீரியகானே.

வசனம்.

சரணம் சரணம் பகவானே உங்கள் அம்மானாகிய கம்சராஜன் காணா வருகிற சதுர்த்தசியில் பிரசண்டமான வில்லுக்கு திருவிழா வென்றும் நீங்கள் பார்க்கும்படி என்னை அழைத்துவரும்படி நானு அனுப்பினார் உம்மைக் கொல்லும்படி உன் அம்மானாகிய கம்சமகா ராஜன் எத்தனித்திருக்கிறார் பகவானே.

கிருஷ்ணன்-கலி.

இத்தவிதம்கூரவந்தனுதா கேளாயிதுசல்லதக்கியமோ
யென்னைக்கொல்ல.
முத்தியத்தமாயவந்த சகடாசூரன்மூர்க்கமுள்ளபூதகியும்
அனுடன்கேசன்
அத்தமுள்ளதேனுகனும் ரெஷபாசூரன் அனுப்பினவர்களை
யெல்லாமடித்திருக்க
எத்தவிதம்யெளிதமாய் யென்னைக்கொல்லயெண்ணமது
கொண்டவிதமறிகிலேனே.

வசனம்.

கேளும் ஆனுபத்தனே காலபிறந்தநாள் முதலாக யென்னைக் கொல்லும்படி சகடாசூரன் பூதகி ரெஷபாசூரன் தேனுகன் அனுடன்கேசன் முதலானவரை யெல்லாம் நானடித்திருக்க அதை யோசித்துப் பாராமல் யென்னை கொல்லும்படியானவன் எண்ணமானது எவ்விதமோ அறியேன் ஆனுபத்தனே.

கிருஷ்ணன்-கரு.

என்னயோசனையெண்ணினான் அந்தகம்சனிப்போது
இம்சைகள்பட்டிட எம்லோகமடைந்திடவே
அன்னவன்விதித்தானோ அறிவெகெட்டதனமோ.

சருள். அடித்தும்சூரரை மடித்ததுமேகண்டு
அடித்துமேதந்திரம் யெடுத்ததைபாரீர் (என்ன)

கொஞ்சப்பசங்களென்றுமே அவன்யெண்ணமும்அவனிட
வண்ணமும்கண்டுகேளா கிள்ளியேயென்மேயே
வஞ்சகமிதுதானோ வாவிட்டவன்யெழுந்தை

சருள். வம்பனோஅவனையும் இப்பவேகொல்லுவேன்
தப்பாமல்அவனையும் தந்திரத்தாலே (என்ன)

நாடியெங்களைகொல்லவே அவனையுமேபோக
தயிரியம்கொண்டுமே நாவுவந்ததோசொல்லவே
தேடித்தனக்குத்தானே தீம்புத்தேடிக்கொள்ளவும்,

வசனம்.

யுகப்பிரளயகாலத்தில் சர்வ ஜீவிகளையெல்லாம் தமது குக்ஷியில் அடக்கி வடவாமுகியென்கிற மீதெழுந்து உதையபானு பிரகாசத்தில் மேகவர்ண்ண முகுந்த கிருஷ்ணா உனது அண்ணாவும் நீயும் ஆரவாசம்காடி இவ்விடம் வந்ததென்ன சொல்லும் கண்மணியே.

கிருஷ்ணன் வசனம்.

கேளும் எனதாதாவே எங்கள் அம்மானாகிய கம்சமகாராஜன் செய்யப்போகிற பிரபலமான வில்லுத்திருவிழா பார்க்கும்படி தூது அனுப்பி இருக்கிறார் அவர்பின்னாலே போய்வருகிறேன் தந்தையே.

நந்தகோபாலன் தரு-கலியாணி.

அப்பாமகனேநேசமாக அந்த கம்சனழைப்பதுசரியென்று
அறிந்தேனிப்போது பாசமதாய்
தப்பாமல்குலைசெய்ய தந்திரமிதுதானே
சத்ராதிஅவனுக்குசித்தம் வேறாவதுண்டோ

கிருஷ்ணன் தரு.

மாமன்மகிழ்ந்தழைக்கவேணும் மதியாமல்அவனையும்
எதிர்த்தனக்கள்செய்ய மண்டலத்தோர்புகழ்கவே
சாமர்த்தியமென்றுசொல்லி தடைசொல்லப்போதெல்லா
தயவைஅறிந்துமெள்ள சுகமாய்அனுப்பிவையும்

நந்தகோபாலன் தரு.

பலநாள்உங்களைக்கொல்லவே-அந்த பகையெங்கேபோச்சுது
வகையெல்லாம்நீக்கி பரிவாயின்பங்கள்சொல்லவே
உலகாதியந்தமும்சொல்லும் உங்களுயிரைவாங்க
ஓட்டாரமாய்நான்ற விட்டானேவெகுபேரை

கிருஷ்ணன்-தரு.

பொல்லாப்பழிக்காளாக்கவே யென்னைசெயமடையாமலே
பயமதுகொண்டு இருமாப்புசிரம்போச்சுதே
கல்லாய்த்தெரிந்துகொண்டேன் நம்மையோசித்திருக்க
நலமென்றெம்களைப்பவன் குலமென்றுநீயேதாரும்

நந்தகோபாலன்-கவி.

வகையானகிரியாம்பு மதகரிசிங்கம்வேங்கை
தகையானகோவுகூட்டம் சொல்லியேதங்கள்தங்கள்
பகையானதொழிலைவிட்டு பாசயேசேர்ந்திட்டாலும்
செகன்தனக்கினமாம்வஞ்சம் திரும்பிட்டதறிகுவீரே.

வசனம்.

கேளும் கோபால சூடாமணியே கிரியும், சர்ப்பமும், பசுவும், புலியும், படுக்கைப் பொருந்திய ஜீவராசிகள் சிலகாலம் பகையை விட்டு பொருந்தியிருக்கும் அந்த கம்சராஜர் உங்கள்மீது கொண்ட பகையை மாந்திருப்பாருண்டோ யோசித்துப்பாரும் குமாரகா.

கிருஷ்ணன்-தரு.

எங்களையனுப்பிவையும் தந்தையாரே
கம்சன்வெண்ணத்தை யறிந்துவாரேன் தந்தையாரே
சுருள். எடக்குகளுமவன் துடுக்குகளும்கண்டு
ஏங்குவானேனிடு தாங்குவானேபாரும் (எங்களை)

நந்தகோபாலன்-தரு.

உங்களையனுப்பிவைத்து திவ்யபரிபாலராகனும்
உள்ளமுங்களிப்பதுண்டோ திவ்யபரிபால
சுருள். உருத்துடனேவெகு கிரத்துடனேயவன்
உங்களையழைத்துமே செய்வானே.

கிருஷ்ணன்-தரு.

செய்யவல்லமையேது தந்தையாரேயென்னை
செயிக்கஅவனாலாமோ தந்தையாரே
சுருள். தெரிந்திடவேமனம் அரிந்திடவேயிங்கே
தேரும்தேரும்விடை தாருந்தாருமிப்போ (செய்ய)

நந்தகோபாலன்-தரு.

விடைதந்தனுப்பிவைக்க மைந்தன்மாரே
மிருத்தவஞ்சகன் மைந்தன்மாரே
சுருள். விஷத்துடனே பாழுந்திடத்துடனேயவன்
மீரியுங்களைக்கொல்ல கோரியழைத்திட (விடை)

கிருஷ்ணன்-வசனம்.

கேளும் யெனது தந்தையே அந்த கம்சன் யெங்களுக்கு விஷ போஜன மளித்தபோதும் யெங்களை மீருவதுண்டோ சந்தோஷமாய் அனுப்பும் தந்தையே.

நந்தகோபாலன் கவி-கலியாணி.

பருத்ததோளுடையயெந்தன் பாலரேசொல்லக்கேளீர்
திருத்தவும்யென்னாலாமோ நீங்களும்போவதற்கு
வருத்தமும்அடைவாள்தாயும் மனமொத்துவிடைகள்பெற்று
பொருத்துமேயிருப்பீரப்பா அசோதையைவரவேசெய்வாய்.

வசனம்.

கேளும் என்னுடைய குமாரச் செல்வர்களே நீங்கள் மதுராபுரிக்கு போகிறபடியால் இந்த விசேஷத்தை உன்தாயாருக்கு தெரிவிக்க வேண்டும். அதற்காக நீங்கள் சற்று நேரம் இருங்கள் குமாரர்களே.

அசோதை வருகிற-கவி.

நீலமைவிழியிற்றீட்டி நிகரில்லாபணிகள் பூண்டு
கோலங்கொண்டிருக்கும் வஞ்சி கூறியவசனம்கேட்டு
காலணிகலகலென்ன கனத்தசிட்டிகையிலேற்றி
சாலமில்லாமலசோதை தையலாள் வருகின்றாளே.

அசோதை தரு.

இலங்குக்கோமளவதிமருக்கு நிபதி எதிரில்லா சோதைவந்தாள்
கணவன்பக்கல் எதிரில்லாசோதைவந்தாள்
அளகவண்டினம்பாட அமரர்சிட்டிகளாட

சருள். அடையில்சோதியும் வாடைகள்மிஞ்சியே
யிடில்லாதவதி தேடவரிதான (இலகுக்)

தங்கச்சரிகைச்சேலை தள்தளவென் றிலங்க
அங்கமணிமுத்தாரஞ் சோதிமின்றிருலங்க

சருள். தோகையுமிஞ்சியே யோகபாக்கியம்
யேகசுந்தரி நாரீமவதி (இலகுக்)

உசகமணிவொய்யாரி நிகாமுத்துசிங்காரி
கனகமணிசிங்காரி கணவன்மகிழுய்யாரி

சருள். காள்பூங்கிளிமேவு மான்மொழி
தாவும்சித்திர பாவையுமென்ன (இலகுக்)

அண்டாண்டபுவன மனைத்துமுண்டருளிய
கொண்டல்வண்ணனைதாங்கி கொஞ்சியேமுத்தந்தந்த

(சருள்.) கூழியமின்பமும் வாரியேமகிழ்
டோவேதோளின்மேல் தோவேவளர்த்தி (இலகுக்)

அசோதை கொச்சகம்-புன்னாகவராளி.

தங்கமணிமகுடர் தறணிமன்னர்தான் களிக்க
அங்கமணிடாடி அணைத்தனையேயென்கணவா
செங்கமலாடிக்கு தேவியுமேயான்சரணம்
இங்கேஅழைத்தவிதம் இயம்பியெயிர்யென்கணவா.

வசனம்.

சரணம் சரணம் என்னுடைய பிராணபதியே தேவரீர் பாதாரவிந்தத்துக்கு அடியாளை அழைத்த விபரங்களை இன்னதென்று சொல்லும் கண்ணாளா.

நந்தகோபாலன் கவி.

வாய்த்தசெந்தேனேமானே மாகொணக்காசேகோளாய்
யடித்தசொல்லுடையகம்சன் திருவிழாசெய்கைகாண
அடுத்தசிறுவரைஅழைக்க அக்குருவர்தனைவிடுக்க
படித்தனமகிழுவந்த பாலரைஅனுப்புவாயே.

வசனம்.

கேளும் பெண்ணே என்னுடைய பிராணநாயகி உன்னை அழைத்த விதமாவது யென்னவென்றால் மதுராபுரியை ஆளுகின்ற கம்சராஜனவன் வில்லுத்திருவிழாவும் பார்க்கும்படி அக்குருவரை அனுப்பி நமது குமாரர்களை அழைத்துவரச் சொன்னாராம் அவர் பின்னாலே குமாரரை அனுப்பிவையும் பிராணநாயகி.

அசோதை தரு.

பகையாளியிடமுன்னம் பாலகரை அனுப்ப
பாசமோ விசுவாசமோ
விகையாகவே அழைத்து மகிழ்ந்துபேசுவதென்ன
மார்க்கமோ யிதுயோக்குமோ

சருள். வாதனைநோவே போதனைசெய்வது
நாதனேகம்சனும் பாதகனுச்சே (பகையாளி)

நந்தகோபாலன் தரு.

அன்னமேயுனே நடிக்க முன்னமேவருமென்றெண்ணி
அரிவையே யின்பம்தெரியவே
பின்னவர்கமக்குபுத்தி சொன்னதேயனேகமாக
தோவே யின்பமிடமே
சருள். தெள்ளியேமைந்தனும் தள்ளியென்மொழி
துள்ளியகோபமும் உள்ளமும்கொண்டார் (அன்

அசோதை தரு.

கண்டவனம்பிள்ளைமீது கொண்டபகைதனைமுடிக்க
காட்டியே நிலைகாட்டியே
அண்டியேருரைவிட்டு கண்டிதம்செய்ய அனுப்பி
அட்கியே அவனைவொடிக்கியே
சருள். ஆத்திடதன்பமும் பார்த்திடகிருஷ்ணனும்
வேத்திமைசெய்வது மெத்தவும்முண்டோ (கண்ட

நந்தகோபாலன் தரு.

சத்துருவானவன்சொல்ல உத்தமமல்லனைவெல்ல
சகலமும் காண்உலகமும்
சித்திரவசனத்தன்னில் சத்திமொழிகம்சனை
தேடவும் மனம்வாடவும்
சருள். செல்வனைகண்டுமே சல்லரிவாகவே
சொல்லிதடுத்துமே மெல்லியேவாராய் (சத்துரு)

வசனம்.

கேளும்பெண்ணே எனது பிராணநாயகி நமது பிள்ளைகளுக்கு கம்மார்க்கமான வசனங்களைச்சொல்லி மதுரைக்கு போகவொட்டாமல் தடுத்துவாரும் பெண்ணே பிராணநாயகி.

அசோதை பத்தியம்-ஆனந்தபைரவி.

செங்கமலர்க்கண்ணனே திருமேகவண்ணனே
திவ்வியகுணமைந்தனே திரும்பிவாடா.

கிருஷ்ணன் பத்தியம்.

பொங்குமுடனிதுகாலம் அம்மாஎன்விட்டியவே
பூரித்துநான்போக போடிபோடி.

அசோதை பத்தியம்.

தங்கமணிகிண்கிணி சலசவென்றசையவே
தாவிமடிமேறியே மகனேவாடா.

18

கிருஷ்ணன் பத்தியம்.

மங்களகுணா நாரியே மாமனிடம்போவதை
மரிக்கவேவந்தியோ போடிபோடி.

அசோதை தரு.

போரதென்னடாமகனே போரதென்னடா
போரதென்னுகள்ளன் ஆது வாரதென்னுவுள்ளங்கொண்டு
நேரமரியாமலிங்கு சோரின்பங்கொள்ளலாமோ

கிருஷ்ணன் தரு.

தேடிவந்தியோ அம்மா நீ தேடிவந்தியோ
நான்தேடியேயென் அம்மாள் நீ தேடிவந்தாய் தடுத்து
வாடிமனம்நொந்து நீயும் மோடிசெய்யவேண்டாமம்மா.

அசோதை தரு.

சண்டனுச்சுதே கம்சன் சண்டனுச்சுதே
சண்டனவன் உன்னைக்கொல்ல கண்டுசொன்னானு நவிட்டான்
துண்டனிடம்கண்டுமனம் கொண்டுயின்பம்செய்யலாமோ

கிருஷ்ணன் தரு.

மீறிக்கொல்வானோ கம்சன் மீறிக்கொல்வானோ
மீறிக்கொல்லும்கோபகுணம் மாறியெங்கள் மீதுயின்பம்
தேடிஉண்மையாகநாது கூறிவிட்டிருக்கும்போது

அசோதை கலி.

வண்மணியானபாலா கம்சனை நீங்கள்கொல்ல
உண்மையாய்வந்ததென்று உருதிகள்கண்டயிந்தேன்
தன்மையில்லாதபாவி சதியதுகுணம்வேருதி
வண்மையாய்உனையழைத்த வகையதை அறிகிலேனே.

வசனம்.

வாருமப்பா குமாரச்செல்வமே நீங்கள் மதுராபுரிசென்று அக்கம்சனைமடித்து சீக்கிரமாக அரண்மனை வந்துசேருங்கள்குமாரகா.

வசனம்.

அப்போது அக்குருவரும் புலராமரும் கிருஷ்ணமூர்த்தியும் மதுராபுரியிலிருக்கும் கம்சமகாராஜனிடமாக இவர்கள் மூவரும் ரதமேறிக்கொண்டு நடக்கிறவிதங்காண்க.

தரு.

சிங்காரமாகவேமாமதுராபுரி சீக்கிரம்போகுவோமே
மங்களமாகவேகம்சனைநித்திடும் மனச்சிறப்பாகமேறுவோம்

ரதமேறிநடக்கவும்நமக்கொரு தடையில்லாசரிகமாகவே
தேவரும்முனிவரும் கிட்டாத்திருவடி
தெரிசிக்க களிகொண்டேனே
யாவர்க்கும்மேலான போகபாக்கியம்பெற்று
அதிகசெல்வமும் பெற்றேனே
சின்னவயதனவும் யென்னைக்கொல்லும்படி
நீசகிழ்த்தகம்சனென்பா யென்னைக்காரியம்செய்தான்
சின்னமடையபான் எவர்க்குநான் அஞ்சுவேனே

பொது வசனம்.

அகோதெப்படியென்றால் கிருஷ்ணமூர்த்தி யானவர் ரதமே மதுராபுரிக்கி பயணமாகி வருகிறபோது கோபிகாஸ்திரீகள் வருவது

கோபிகாஸ்திரீகள் கவி-ஆநந்தபைரவி.

எவர்களும்புரிந்தவேலை இன்பமாய்முத்தம்தந்து
ஆவலாய்சிலதோழன் ஆகவேயிருந்தகிருஷ்ணர்
தேவனும்மாயம்செய்த சேதியை அறிவோமென்று
கோபாலமாதரெல்லாம் கூடியேவருகின்றாரே.

தரு.

கோபலமாதர்வந்தார் சுவாமியைத்தேடி
கோபால மாதர்வந்தார்
கோபாலமாதர்வந்தார் குலுங்கப்பணி துலங்க
சுருள். குங்குமகளபமும் பரிமளம்வீசவே
கங்கணபங்கியும் செங்கதிரெனவே (கோபால
முல்லைநகைதுலங்க முத்துசிட்டியிலங்க
சொல்லும்பலபணிகள் சொலிதலிதமுடனே
சுருள். சூரியகிரணமும் மீறியேமணியொளி
ஆரமுமார்பினில் மாலையுமிலங்கிட (கோபால
கண்ணன்தன்மேலாவலாய் காமம்படைத்தழகாய்
மின்னலிடைபணிகள் மேகலை நலங்கிட
சுருள். மேதினியுண்டருள் நாதனும்சென்றது
சோதினையோவென்று வந்தனைமிஞ்சிட (கோபால
காசாம்புமேனிக்கிருஷ்ணன் கலங்கக்குலாவிகொஞ்ச
ஆசாபாசமிகுந்த அர்ப்புதமாதகோபிகள்
சுருள். அரியவேமனமது பரிவுகள்மிஞ்சியே
பிரியமும்கோபமும் தெரியலாமென்று (கோபால

கவி-முகாரி.

தங்கையேஅக்கமாரே சரசசல்லாபமாக
மங்கையேமகிழ்ச்சிக்கூடி மாயவர்கிருஷ்ணதேவர்

19

எங்கையோபோய்விட்டாரே அவருயிர்தரிப்பதேது
நங்கையேநாமெல்லோரும் நாமினியென்னசெய்வோம்.

வசனம்.

அடியம்மா கோகிலாம்பா அக்கா மதனசுந்தரம் தங்கா மதுரைவாணி இதுவரையிலும் நம்மைக் கொஞ்சிக்குலாவி லீலாவினோதமாகயிருந்த கிருஷ்ணபகவான் எங்கையே போய்விட்டாரே அவரில்லாமல் நமது நகரம் தாமரையில்லாத தடாகம்போலே நம்பிக்கையில்லாதிருப்பது இதற்கென்ன செய்குவோம் தங்கையே.

இளையவள்-தரு.

உக்கிரக்கோமளாங்கி அக்கா
ஒளிபெற்றபகவானும் எங்கையோடி
இச்சையைவிட்டுபோக அவர்க்கு
இப்போதவர்க்கென்ன வர்மமோடி

0-1 82-15
N11

மூத்தவள்-தரு.

தங்கையேகோகிலாம்பாள் நம்மை
சரசமாகக்கூடி யிருந்தாரேடி
இங்கிதபூஷணமே அவரிஷ்டத்தையின்றேடே
மறந்தாரேடி

இளையவள்-தரு.

செண்பகசெண்டுபோல் அக்கா
சேர்ந்துசுகத்தையும் அடைந்தாரே
கண்படகாணமல்விட்டு அவர்
கடுகிமகிழ்ந்து நடந்தாரேடி

மூத்தவள்-தரு.

ஆசைதவிக்குதடி அவரை இனி
அறியாமலே யின்பம்தேடுதடி
நேசம்துதிக்கவந்த அவர்
திருமுகத்தை கண்ணால்தேடுதடி

85737

கவி-எதுகுலகாம்போதி.

எல்லாரும்நாம்முடித்த யிலகுசெண்டேயம்மா
சல்லாபமாகமுத்து தரித்திட்டகன்னியாரோ
வல்லவன்தனையனுப்ப மதுரைக்குஅவன்பின்னாலே
சொல்லாமல்போறாரம்மா சுவாமியைதடைசெய்வோமே.

வசனம்.

ஆரம்மா மதுரைவாணி நாம் அனைவோரும் முடித்த செண்பகப்பூ செண்டை ஆறொருவொரு கன்னி முடிப்பதாக அதனுப்பி

இட்டுக்கொண்டு வரச்சொல்ல அவர் மதுரைக்கு அவன் பின்னாலே போகிறதாகத் தெரியவந்தது நாம் சடுதியாகச்சென்று சுவாமியை தடுத்து அழைத்துக்கொண்டு வருவோம் தங்கையே.

முத்தவள்-தரு-மோகனம்.

இதோபோறார்பாரடி இதோபோறார்பாரடி
இதோபோறார்பாரடி இரவிதயம்போலே
உதயகிவேதியே யாதகிதங்கள்பாடி. (இதோ)
கோவர்த்தனக்கிரியைக் குடையாய்ப்பிடித்தவர்
மேவுங்காளிங்கன்மீது விளையாடியிருந்தவர் (இதோ)
சிவந்தசெண்பகச்செண்டு சித்திரவடிவழகர்
தவழ்ந்துவிளையாடியே தயிர்பால்வெண்ணெயுண்டவர் (இ)

பொது வசனம்.

அதோதெப்படியென்றால் கோபிகாஸ்திரீகள் ஓடிவந்து பகவானைக் கண்டு தடுத்துச் சொல்லுகிற விதங்காண்க.

கோபிகாஸ்திரீகள்-பத்தியம்-ஆனந்தபைரவி.

கஞ்சமலர்க்கண்ணனே கரியமால்வண்ணனே
கமலபொற்பாதனே கோடிசரணம்
கொஞ்சுமணிதீபமே குணமேகரூபமே
குலவுமணிமார்பனே கோடிசரணம்
விஞ்சுபுகழ்தீரனே வேதாந்தசோதியே
வீரதண்டைகள்கொஞ்சும் வேணுநாதா
வஞ்சியருடனே உன்னதமாகியே
சஞ்சலமில்லாமலே சுவாமிவாவா.

கிருஷ்ணன்-தரு-நவரோஸ்.

வாரும்பெண்களாயின்பங் கூறுங்கண்களா
மாமன்வீடுதேடிப்போறேன் மறிக்கலாகுமோ
கோபி. ஆசைநாதனேயெங்கள் மோசம்போனோமே
ஆருனக்குச்சொல்லித்தார்சதி அழையவாருமே
கிருஷ். கோபியர்களேமிக்க தாபியர்களே
கோமளங்கியேயிம்மட்டுக் கொஞ்சலாமோடி
கோபி. விரகமீதாலேமனம் உருகிவாடுதே
விணுமோசம்செய்யவேண்டாம் மேகவர்ணனே
கிருஷ். சரசசாக்ஷியேயின்பம் பெருகுங்காட்சியே
ஜாலஞ்செய்தென்னையுந் தடுக்கலாமோடி
கோபி. ஏதுபாவமோவெங்கள் மீதுகோபமோ
எட்டிலொருமுத்தந்தந்து விட்டுவாருமே

கிருஷ். சுந்தராங்கியேயிங்கு வந்தபாங்கியே
தொட்டுத்தாரேன்மதுரைக்குப்போய் துருசாவாரண்டி
கோபி. ஆடைக்கலையவேகொண்டை கூடுங்கொடியிலே
அன்பாய்ஓர்முத்தந்தா அரசனேவாரும்

கிருஷ்ணன்-தோச்சகம்-புன்னாகவராளி.

செம்பவளகொங்கையரே சித்திரமோகினமே
கும்பலுடன்மகிழ்ந்துகூடி வந்தகோபியரே
இன்பமுடன்யிருங்கள்போய் நான்மதுரை
சம்பிரமுடன்சென்று சடுதியில்நான்வருவேன்.

வசனம்.

வாருங்கோள் எனது கண்ணாட்டி நீங்கள் வருத்தமடைய வேண்டாம் நான் மதுராபுரிசென்று நாளையதினமே வருகிறேன் சந்தோஷமாய் அனுப்பிவையும் கண்ணாட்டிகளே.

கோபிகாஸ்திரீகள்-தரு-உசேன்.

சீரிதமணிதீபமேயெங்களுக்கொரு சொல்லமனஸ்தாபமே
ஓதியந்தமாமதுரைஉங்கள் மாமன்வீடுசேர
ஒப்பியேஅனுப்பிவைத்து எப்படி தாணிதிருப்பேன்

கிருஷ்ணன்-தரு.

மாத்தயர்ந்ததங்கமேகண் ணுக்கு கண்ணானவந்தயெந்தன்பொங்கமே
பார்த்துவராமாமதுரைபக்ஷங்கொண்டு தானிருக்கப்பாதையில்
பெணமறைத்துவாதுசெய்ய வேண்டாம்பெண்ணே

கோபிகாஸ்திரீகள்-தரு.

எத்தயின்பம்சாத்துரீர்வருவேனென்று எங்களையேமாத்துரீர்
கோத்துலகையையும்பியாடி கூடிவிளையாடியே
கொஞ்சியேநீர்யின்பந்தந்து வஞ்சியரைசேரவாரும்

கிருஷ்ணன் தரு.

த்தியில்லாமாதரையிப்படிசொல்லபூரணமோ ருதாகயிப்படி
த்தியாக்கைகளைத்தொட்டு பார்க்குறேன் சமர்த்தையென்று
பாசமிஞ்சிபேசலாகுமோ நேசமாலவஞ்சியரே

கோபிகாஸ்திரீகள் வசனம்.

ஆரம்மா தங்கைமார்களே மகிழும் புஷ்பத்தை நசுக்கி மோரலாகுமோ ஜெகத்ரக்ஷகர் வருகிறேனென்று சொல்லுகிறபடியால் நாம் அரண்மனை சேருவோம் தங்கைமார்களே.

கிருஷ்ணன்-தரு-கேதாரம்.

அக்குருவ அண்ணமாரே வாரும் அண்ணா
ஓக்கவேமணிசித்திர ரதமதிலேரும்

சுடரொளிபணிமிக்க துன்ன — கல்ல
திடமானமாமதுரை சமுகத்தைநாடியே

அம்பாபேரிகை பாட — மிக்க
சம்பிரமமாகுதிரைகள் வேகங்கொண்டோட

காடுநகர்தேசம் தாண்டி — கல்ல
தேடிமதுரைவந்தோம் ஜெயங்கொள்ளவேண்டி

பொது வசனம்.

அகோதெப்படியென்றால் மூவருமாக ரதமேறிக்கொண்டு மதுரைக்கு வருகிறபோது கம்சராஜன் உடுப்புகளை வண்ணானவன் சலவை செய்து யெடுத்துக்கொண்டு வருகிதவிதங்காண்க.

வண்ணான் வருகிற-தரு.

சோர்போடம்மா சோர்போடம்மா-நீ
சொந்தவண்ணானுக்கு துணிபோடம்மா

பல்லாவும்நான் கையிலெடுப்பேன்
பழந்துணிமூட்டையை நான்சுமப்பேன்

உழமண்ணில்லா வுடுப்புகளை-நான்
சொக்குபோல சலவைசெய்வேன்

வீடுவீடாய்சோ றெடுப்பேன்-நான்
வீட்டுக்கேகியே பொசிப்பேன்

இராஜனுடுப்பையெல்லாம் வெளுத்தெடுத்து
மூட்டைகட்டியே கொடுக்கவந்தேன்

கழுதைக்குகடன் பட்டுபட்டு-நான்
கண்டதுபோதுமே கண்காக்ஷி

பழுதுகள்வந்திடும் யெரிச்சலாலே
பாரமூட்டை சுமக்கலானேன்

பொது-வசனம்.

இப்படிக்கி வண்ணானவன் வருகிறபோது இராமகிருஷ்ணன் இரண்டுபேர் வண்ணானைப்பற்றி யேதென்று சொல்லுவார்.

கிருஷ்ணன்-தரு.

ஆரடா அடவண்ணான் அபரஞ்சிபட்டாடை
ஆருக்குபோகுதடா சொல்லடா சொல்லடா
சோரடாகொண்டும்போறாய் துன்னக்கொஞ்சங்கேட்டால்
தாரப்போகாதேகில்லும் அடவண்ணான்தாரப்போகாதே

வண்ணான்-தரு.

சொல்லடாசொல்லடாவென்றால் சும்மாபோரத்துக்கில்லை
துடுக்குகள்பேசவந்தீர் தம்பேநீங்கள்
நில்லடாநில்லடாவென்று நீங்கள்ஆட்டாகேழ்க்க
நெஞ்சிக்கொழுப்பது ஓதம்போ

கிருஷ்ணன்-தரு.

கிருவுநெஞ்சிக்கொழுப்பல்லடா தோன்பேரிபோளப்பா
நின்றுபதில்சொல்லடா யெங்கள்வண்ணானே
கெஞ்சிக்கொஞ்சிநாங்கள் கூடியாடியேவந்தோம்
குணத்தையரியமாட்டாய் அடவண்ணான்

வண்ணான்-தரு.

அரியமாட்டாயோஒரு அசுத்தவேசம்
பசங்கள்ஆர்பெற்ற தாதலோயோநீங்கள்
தெரியஅரசனுக்குஅரிவித்து உங்களைநான்
சின்னப்படுத்திவைப்பேனடா துஷ்டா

கிருஷ்ணன்-தரு.

உன்னிடமூட்டையைதாடா வண்ணாதாடா
ஒதிங்கிடக்காதேமூடா கிட்டவாடா

வண்ணான்-தரு.

வாடாவென்றுசொல்வதேது மெத்தவாது
மெத்தவாதுதன்மை அரியாதோநீதுகள்ளருக்கு

கிருஷ்ணன்-தரு.

சூதென்றுசொல்லவந்தாயோடா மனத்தென்பாய்
துணியைப்பிடுங்குவேன் பாராய்யிதோகோராய்

வண்ணான்-தரு.

பிடுங்காதேயெட்டபோடா சூராபோடா
அடங்காதுயென்கோபம்மூடா கெட்டமூடா

கிருஷ்ணன்-தரு.

அழுக்குமூட்டையெடுக்கும்கூறு அடகூறு
பரிக்கும்உலகமெங்கும்தாறாய் அதாவிறாய்

வண்ணான்-தரு.

ஆடுமாடுமேய்க்கும்கோனாய் அடகோனாய்
அடக்குவார்கம்சனும்வீறு அதைதாறு

கிருஷ்ணன்-தரு.

கம்சனெங்கள்மாமனாச்சே மாமனாச்சே
வம்சமழியவந்துபோச்சே அதுபோச்சே

வண்ணான்-தரு.

கவுடெனக்கன்டேன் உங்கள் உங்கள்பேச்சே
துண்டரென்றுசொல்லலாச்சே வம்சமாச்சே

கிருஷ்ணன்-தரு.

கிழவாகிழவா முருக்காதே சொலிக்காதே
அழவாயாலடிப்பேன் அடிப்பேனே

வண்ணான்-தரு.

கெர்வங்கொண்டுமெரிக்காதே குதிக்காதே
அறிவேண்டா உங்கள்வீரம் மெத்தநேரம்

பொது வசனம்.

இப்படிக்கு கிருஷ்ணதேவரும் வண்ணானும் சண்டையிட்டுஇருப்பதைக்கண்டு வண்ணாத்திவருவது.

வண்ணாத்தி வருகிற-கவி.

வண்ணானும்பசங்களோடு வழிமரித்தார்களென்று
கண்ணாகசா தம்வார்த்தி காதுகிசெவியில்கேட்டு
குண்ணானும்குன்றுமிக்க குழுங்கவேபவனிகளாட
கண்ணான்முன் வண்ணாத்தி கடுகியேவருகின்றாளே.

தரு-மோகனம்.

வண்ணானுடனேசண்டை பண்ணும்பசங்களாரோ வென்று
வண்ணாத்திவந்தாளே வண்ணானைத்தேடி (வண்ணாத்தி)
கொக்கனவேரலேமினை குலுங்கப்பணிகள்துன்ன
குதித்துவண்ணாத்திவந்தாளே ஓட்டம்பிடித்து (குதித்து)
ராஜன்சாலுவைக்கொண்டு போகத்துணிவுகொண்டு
கயந்துவண்ணாத்திவந்தாளே வண்ணானைத்தேடி (கயந்து)
கூடும்வழியில்வண்ணான் போடும்சண்டையைக்கண்டு
ஓடிவண்ணாத்திவந்தாளே வண்ணானைத்தேடி (ஓடிவண்.)

வசனம்.

அகோதெப்படியென்றால் கிருஷ்ணமூர்த்தியைப்பார்த்து வண்ணான் சொல்வது.

வண்ணாத்தி-தரு.

துள்ளிக்குதிக்கின்ற துஷ்டப்பசங்களே
தூர்மார்க்கத்தையடக்குதேன் துரையன்டைவாடா

கிருஷ்ணன்-தரு.

துரையவனெங்கள்சொக்க அம்பரந்தரண்டி
அரையுவேயகன்னத்தில் அப்புரம்போடி.

வண்ணாத்தி-தரு.

போடிபோடியென்று பொங்கிக்கவிழாதே
ஓடியரசனாலே உங்களைக்கொல்வேன்

வண்ணான்-வண்ணாத்தி-தரு-மோகனம்.

பன்னும்பசங்களை காண்டாடி
யென்னையெதுக்கவும் போமோடி
இன்னமின்னமுமிளப்பேனோ காணடி
சின்னாபின்னமாக செய்குறேன்பாரடி

கிருஷ்ணன்-தரு.

இந்தக்கெருவங்கொண்ட சேதடா வண்ணான்
இருக்குமிருக்கமீயெங்க ளம்மானைக்கோறி
செருந்தைதடக்குமிரி தின்டிப்பிடிப்பேன்பாரீர்

வண்ணான்-தரு.

கெட்டுப்போனவந்தகாலமோ வந்தக்காலமோ
கிள்ளிகிள்ளியேகுடி கிட்டவந்துமோடி
துள்ளித்துள்ளியேகாடி துள்ளியப்பிடுங்காடி

கிருஷ்ணன்-தரு.

மாமனுடுப்பைதந்தாலாச்சுது தந்தாலாச்சுது
வணங்கித்தருகாவிட்டாலே வருகுமதினாலே
குலங்கள்வேருபட்டாலும் குதித்துயேருவேன்மேலே

வண்ணான்-தரு.

இடப்பசங்களாயிது யென்னடாயிதுயென்னடா
இரடிவிடுவேன்பாரும் யிடக்காகதலேபோகும்
திருடிபிழைக்கநீயும் சிறுவரேஉயிர்சேரும்

கிருஷ்ணன்-கந்தார்த்தம்-மோகனம்.

பழுத்திடவண்ணான் யிழுத்திடமோடி
அழுத்திடஉயிரை கிழித்துமேபோட

தரு.

இழுத்தானேபாராய்சுமூட்டிமோடி கிழித்தானேகோரய்
சுமூட்டியிழுத்துகிழித்து வீசியெரிந்தேன்பாரும்
அன்னாயெடுத்தஉடுப்பையெல்லாம் உடுத்திக்கொண்டேகவே

பொது-வசனம்.

இப்படியாக வண்ணானைக் கிழித்தெரிந்து கம்சராஜன் உடுப்பையெல்லாம் ராமகிருஷ்ணன் உடுத்திக்கொண்டு யிருக்கிறபோது வண்ணாத்தியானவள் பிரலாபிக்கிற விதங்காண்க.

முகாரி-வண்ணாத்தி-தரு.

ஐயையோ நானினி யென்ன செய்குவேன்நாதா
சின்னபசங்களாலே ஆணைமுகன்மாளவிதியோ யென்பிராணநாதா
வாலைவயதில்மாலைசூட்டியே யென்பிராணநாதா
மடிந்திடயிக்குவிதிமுடிந்ததோ யென்பிராணநாதா
ஐந்துவயதில்வந்தயெந்தனை யென்பிராணநாதா
அருமைமணந்தான்புரிந்தீரே யென்பிராணநாதா
நொந்துநானும்வாடிடலையவே யென்பிராணநாதா
வந்ததேவிதியென்னசெய்குவேன் யென்பிராணநாதா
கையழுகுமெய்யழுகுமே யென்பிராணநாதா
கண்டுகோரிக்கை யென்றுயானுவேன் யென்பிராணநாதா
பாசமிஞ்சிய ஆசைநாயகா யென்பிராணநாதா
பாவியானனே உன்தேவியாகியே யென்பிராணநாதா

பொது-வசனம்.

அகோதெப்படி யென்றால் இவ்விதமாக வண்ணாத்தி அரண்[illegible] ணைச்சேர ராமகிருஷ்ணன் மதுரைக்குப் போகும்படி நடக்க அந்[illegible] சமயத்தில் கம்சராஜனுக்கு கலவைச்சாந்து பரிமளாதிகள் கொண்[illegible] வரும்படியாக வக்கிரகையென்று கூனிவருகிற விதங்காண்க.

வக்கிரகை-கவி.

வாசனைகளம்கூட்டி மகிழும்கெந்தங்கலந்து
யோசனைப்பரிமளிக்கும் உயர்ந்தகஸ்தூரிகீச
தாசனப்பொடியும்கொண்டு சந்தனக்கிண்ணம்ஏந்தி
நேசமாம்வில்லிருக்கு மிடமெங்கேசொல்லுவீரே.

வசனம்.

கேளும் காவலர்களே எங்கள் அம்மானவர் செய்ப்போகி[illegible] திருவிழாவை பார்க்கும்படி வந்தோம் அந்த வில்லிருக்கும் இட[illegible] காண்பிக்கவேணும் காவலர்களே.

அக்குரூவர் வசனம்.

மகானுபாவரே உங்கள் அம்மான் கொண்டாடப்பட்ட லீல வினோதமானது இதுதான் கண்ணாலேபாரும் ஐயா.

கிருஷ்ணன்-தரு.

சதுர்த்திசைக்கொண்டாடும் வில்லா-யிந்த
தரணியறியாதொருசொல்லுயெங்களை கொல்லவேபோறாரோ
அவரிதற்குயென்ன சடங்குசெய்தாரோ
பரிவாங்கவயலத்தைக்கண்டேன் பதரியறியாக்கோபங்கொண்டேன்

23

எவரும்மனமேங்க வெட்டிபிடித்தேன் அண்ட
மதிருசத்தமுழக்கமாக ஒடித்தேனே.

வசனம்.

அகோ கேளும் என்று அண்ணாவே நாம் ஆயுதச்சாலைவந்து திருவிழா வில்லையும் முறித்து எதிர்த்தக் காவலரை மடித்து விட்டோம் இப்போது சூரியமூர்த்தியானவர் குணபாரம்சேர்ந் தொளிந்துக்கொண்டபடியால் இராத்திரிதினம் யாதவதோழருடன் உபவனம்சேர்ந்து பொழுது விடிந்தவுடன் மாமாவைக் காணுவோம் அண்ணாவே.

பொது வசனம்.

அகோதெப்படியென்றால் இராமகிருஷ்ணன் உபவனம்சேர்ந்திருக்க கம்சராஜன் நித்திரையில் துர்ப்பலமானசகுனங்கண்டுசொல்வது.

கம்சன்-கவி-முகாரி.

இடியொளிபேரிபாட இருபுரம்மந்திரிசூழ
குடிமலைக்கலைதீர கோபங்கொண்டெழுந்துசீறி
வடிவழகன்ராமகிருஷ்ணன் வந்திடக்கொல்வேனென்று
நெடிமுடிகம்சராஜன் நிலைகொலுமேவினாரே.

தரு-கமாசு.

காலனஞ்சவேஉக்கிர கோபங்கொண்டெழும்பியே
கம்சபூபதியும் வந்தார்
தளமந்திரிகளிருபுறம் வந்தடிதாழ கம்சபூபதியும்வந்தார்
மாலைமார்பிலிலங்க மணிமுடியும்துலங்க
மாதர்க்கவரிபோட சோதிமணிகளாட
சுருள். வல்லபமீட்டியே வில்லுமிலங்கிட
வாசனைமாமலர் தேசமும்செழிக்க (காலனஞ்)
சோதிப்பிரதீபம்போலவே காதில்குண்டலமின்ன
மூதிக அக்குரூவர்போன சேதியறிவோமென்று
சுருள். உச்சிதமணிமுடி கச்சுடர்வீசவே
வச்சிரபல்லிகளும் சொச்சியசீலன் (காலனஞ்)
தனுவும்தண்டமும்பாலா சகலவிருதணிந்து
சரிவராமகிருஷ்ணனை தடுத்துக்கொல்லுவேன்
சுருள். தந்திரமெண்ணியே விந்தையாய்ச்சூழ்ந்தவ
வஞ்சமானோ நெஞ்சமுந்துடிக்க (காலனஞ்)
மிருந்தகோபத்துடனே மீசைபடபடென்ன
பகைத்துமனதில்கோபம் பல்லும்படபடென்ன
சுருள். பஞ்சணைமீதில் மிஞ்சியேதுலங்க
விந்தையாய்தேரினேன் சிந்தையும்வாட (காலனஞ்

கம்சன்-கவி-காதகாமக்கிரியை.

பர்ப்பதநீதிதேர்ந்த பரிவுள்ளமந்திரிமாரே
பொற்புள்ளமஞ்சமீதில் பொருந்திநான்நித்திரைசெய்ய
அர்ப்பனமானமிக்கத் தோன்றிடக்கனவுகண்டேன்
அற்புதமந்திரிமாரே அன்புடன்உரைசெய்வீரே

வசனம்.

கேளுங்கள் என்னுடைய மந்திரிமார்களே ராத்திரியதினம் கம்சத்தாளித மஞ்சத்தின்மீதில் நித்திரைசெய்ய நான் துர்ப்பமான சொர்ப்பனங்கள் கண்டேன் அதைச் சொல்லி வருகிறேன் கேளும் மந்திரிமார்களே.

தரு-முகாரி.

கண்ணாடி சபைதனில் கண்டேன் சிரசில்லாமல் மந்திரிமாரே
தண்ணுகசந்திரன் தானுக்குத் தாணிவாகவும் மந்திரிமாரே
இருந்தவிருக்ஷமெல்லாம் இலையும் உதிரக்கண்டேன் மந்திரிமாரே
பொருந்தியிடந்தனில் பூமிபள்ளமாகவும் மந்திரிமாரே
தழுவியப்பிணத்தைநான் தயங்கிமயங்கிடவும் மந்திரிமாரே
கழுதைமேலேறியேகண்டேன் சஞ்சரிக்கவும் மந்திரிமாரே
செப்புத்தாமரைத்தண்டை தின்னபசிகளாற மந்திரிமாரே
ஒப்பிலாவென்சிரசில் ஒருவர்கொட்டவும்கண்டேன் மந்திரிமாரே

மந்திரி-வசனம்.

கேளும்மகாராஜனே நீர் விசனப்படவேண்டாம் கர்ப்பினைதப்பி சொற்பனத்தில் ஒன்றும் நடவாது நமது பட்டணத்தில் ராமகிருஷ்ணன்வந்து வண்ணானைக் கிழித்தெறிந்து தங்களுக்குவந்த உடுப்பையெல்லாம் உடுத்திக்கொண்டு தங்களுக்குவந்த வாசனைத்திரவியம் பூசிக்கொண்டு வில்லின்சாலைவந்து வில்லையும் முறித்துப்போட்டு உபயவனம் சேர்ந்து பொழுது விடிந்தவுடன் வரப்போகிறார்களாம் சுவாமி.

கம்சன்-கவி.

எடுத்துமேதூதர்சொன்ன இவ்வளவும்காதில்கேட்டு
அடித்துமேஉதட்டைக்கவ்வி அடர்விழிபொரிபறக்க
எடுத்துமேவொங்கள்வில்லை இடையனும்முறித்தானென்று
கடுத்துமேகுதித்தெழும்பி கம்சனும்வருகின்றானே.

கம்சன்-தரு.

வீராதிவீரனே இடப்பசங்கள்
வில்லைமுறித்திடவே பல்லைக்கடித்துமே
சூராதிசூரம்படைத்த வெல்லுமுடைய
சித்தவீரமைந்தனை சத்துமீறியே

வண்ணானைக்கிழித்தெறிந்தே நமதுவஸ்திரமெல்லாம்
பறித்துரோஷமுடனே
பண்ணுதகோலம் நடத்தவந்திட
பயலைமடித்திடவே செய்யும்வகையை
பட்டணத்திலுள்ள போகள்மகிழ்ந்துமே
பந்திபந்தியாவரும் வித்தையரிய
துஷ்டதிருடன்சண்டை தொடுக்கயிடந்தனி
சுத்திலும்ஆசனம் விட்டுவைத்திருக்கள்
சண்டைசெய்யுவிதமரிய வெல்லவரும்
சாரியாகவரலாமே பேரிமுழங்க
துண்டவீரமல்லர்களும் அரியவே
சொல்லியேதயார் செய்யும்வல்லவர்களே

வசனம்.

அகோதெப்படி யென்றால் கம்சராஜன் சண்டைக்கு முஸ்திப்பு செய்திருக்கிற சமயத்தில் வசுதேவரானவர் கொலுவாக வருவது.

வசுதேவர்-கவி.

கண்மணியென துமைந்தன் கார்வண்ணன் கிருஷ்ணன் தன்னை
தன்மையில்லாதகம்சன் தன்னிடமழைத்துக்கொல்ல
உண்மையையறிந்துகல்ல யோசனைசெய்தாரென்று
வன்மையாய்மிகுந்தநீதி வசுதேவர்வருகின்றாரே.

தரு.

தேவதேவமகா தேவசிதானையீன்ற
வசுதேவசிகாமணி வந்தாரே
உச்சிதமாக தேவசிகாமணி வந்தாரே
சித்திரமணிக்குண்டலங்கள் செஞ்சுடர்செவியில்மின்ன
ரத்தினசிகாமணி வந்தாரே
விநோதமாக ரத்தினசிகாமணி வந்தாரே
சோதிமணிப்போஜகுல சூரசேனராஜன்பெற்ற
நீதிவசுதேவர் வந்தாரே
மனமுருகி நீதிவசுதேவர் வந்தாரே
பூமிபாரந்தீர்க்கவந்த பிள்ளைகளைக்கொல்லுகம்சன்
சேமகமறிய வந்தாரே
மனமுருகி சேமகமறிய வந்தாரே

வசுதேவன்-கவி.

வேதனைதந்தஆதிவிமலனே உலகுக்கெல்லாம்
நாதனேயெந்தன்மைந்தா நானிலம்புகழும்பாதா

கோதிலாக்குழக்கி தன்னை கொல்லவேவரவழைக்க
மாதவர்கம்சனாலே நான் துயராகினேனே.

வசனம்.

வேதனை உக்கிரமிடமாக தந்தருளிய மகானுபாவனே எனக்கு மைத்துனராகிய கம்சராஜன் சொன்னபடி வரவழைக்க அதைக் கேள்விப்பட்டு நான் மனம் வாட்டலாகினேன், தெய்வமே.

வசுதேவன் - தரு.

எதிரில்லாமெய்த்தப்பாலா கிருஷ்ணபாலா
மதுரைக்குமேன்வந்தாயோ கிருஷ்ணலோலா
சுருள். மடிக்கக்கம்சனும் வரவழைத்தானே
இடக்குசெய்திட மிளிபிழைப்பானோ (எதிரில்)
தேடிக்கம்சன் தானிடக் கிருஷ்ணபாலாயிங்கே
ஓடிகாணவந்தேதன்னை மிஷ்டலோலா
சுருள். உன்னையளித்திடும் தாயறியார்ளோ
பின்னேவார்த்தவள் பிறாதெறிவாளோ (எதிரில்)
உன்னைப்பெற்றபோதருளி யேசமாவனை
என்னமறுமொழி சொல்வேன் யேசாதா
சுருள். ஒப்பில்லாதவர் உன்செயல்கொண்டு
எப்போதேருவேன் மென்றுயர்விட்டு (எதிரில்)
இந்தசேதிதாயறிந்தால் யேங்குவாளோ
நந்தனுந்தானறிந்தால் நாங்குவரோ
சுருள். தங்கமாமணி தற்பரமே
அங்கம்வாடுதே அற்புதபாலா (எதிரில்)

பொது-வசனம்.

அதோதெப்படி யென்றால் வசுதேவர் பிரலாபித்து யிருக்கிறபோது அவரைக்காணும்படி தேவகியம்மன் வருவது.

தேவகி-கவி.

தந்தையும்பரதவிக்க தனையனைவரவழைத்து
விந்தையாய்கம்சன்கொல்ல விதமெல்லாங்காதாற்சேட்டு
தந்திரமனைவியிட்டு தயங்கியேகணவன்பக்கல்
சிந்தையுமிகக்கலங்கி தேவகிவருகின்றாளே

தரு.

இரட்சகக்கர்த்தாவாய்வந்த கிருஷ்ணமூர்த்தியைதந்த
நங்கைதேவகியும்வந்தாள் வசுதேவரைக்காண
நங்கைதேவகியும் வந்தாள்

பழுமில்லாதகொடும் பாவிஅம்மானைக்காண
இஷ்டமாகவந்தபாலன் முகம்காணடி
சுருள். இருகையிற்கங்கணம் பெருகியேமின்ன
அரிவைமார்குழலே அம்மானைக்காண (இரட்)
சொருகுமளகபாரம் அலங்கிஅவிழ்ந்தநீள
இருகைகளைமுறித்து விதையறிந்தமேமீள
சுருள். இலகுக்கிளிமொழி உலருக்கதிபதி
நலமாயாசனை பலமாயறியவே (இரட்)
கொல்லக்கன்னிக்கம்சன் கூறியழைத்ததைநாடி
கொல்லவெவருங்கண்டு கோறியிருக்குதாடி
சுருள். சோலைக்கிளிமொழி செழுக்கதிர்விழி
மாலுக்குகந்திடும் மாதாவும்மென்றிட (இரட்)
அன்னையாகியகிருஷ்ணன் அயனைசுமந்தபெற
என்றதவம்செய்தேனோ-யென்றிரேகமுருகவும்
சுருள். என்னரியேமாமது ரன்னிசேவாடி
கன்னியர்குழலே உன்னதமாக (இரட்)

தேவகி-கவி.

வல்லமென்பிராணநாதா மகாபாவியெனதண்ணன்
வில்லொன்றுசோடித்தந்த வேடிக்கையாகவுந்தான்
சொல்லியபடியழைத்து தந்திரமகனையின்று
கொல்லவேவரவழைத்த கொடியர்க்கென்னசெய்குவேனே.

வசனம்.

அதோ கேளும் எனது பிராணநாயகா மகாபாவியாகிய எனது அண்ணனாகிய கம்ச மகாராஜன் அற்பபலமான வில்லுத் திருவிழா வென்று அழைப்பார்க்கும்படி நாமிருந்தனை அழைத்து மிஷ்டிகளைவிட்டு கொல்லத்துணிந்திருக்கிறார் இதற்கென்ன செய்குவேன் பிராணநாயகரே.

வசுதேவர்-தரு.

மாயிலக்குயிலே மகிழ்ந்திடும்மயிலே
மகனுக்காகவேவாடி அழுவேண்டாம்பெண்ணே
சுருள். வஞ்சகமென்னசிய கம்சனைமடிக்கவும்
கொஞ்சமோகிருஷ்ணனும் மிஞ்சியநீரன்

தேவகி-தரு.

மல்லரையிவிக்க வல்லமையொடுக்க
மாலுமோகிருஷ்ணனுமே யென்றுசெய்குவேன்

சுருள். பாரியமல்லரும் வரிபடிக்கவும்
மீறியேமடிக்கவும் நேருமோ அண்ணன்

வசுதேவர்-தரு.

கிருஷ்ணனும்பிறக்க துஷ்டர்களளிக்க
கிட்டினான்வெதிர்த்தும் அந்தகாலம்பெண்ணே
சுருள். செங்கையும்மலரடி செம்மையும்சேர
அங்கமுங்கண்டேனே பங்கமுண்டாமோ

தேவகி-தரு.

தந்தனே ஆவி நொந்தனே ஆவி
தாயிவளைத்திடாமல் மகிழ்ந்தேனே
சுருள். சர்ப்பனைசெய்யவும் அம்மாபெண்ணிலே.
கற்பனையோவிது வெப்படிதாருவேன்

தேவகி-தரு.

அண்ணனிடம்சென்று கண்மணியைக்கொல்லாமல்
அடுத்துதடுத்துவாரேன் விடைதாரும்சுவாமி

வசுதேவர்-தரு.

விடைபெற்றிடசென்றாலும் தடைபடுவானோகம்சன்
வீணாபோகாதே அங்கே மடமானே பெண்ணே

தேவகி-தரு.

போகாதேயென்றுசொல்லி சோகத்தடுத்துவென்னை
பிள்ளைக்கிடர்நினைக்க பெருவேனோசுவாமி

வசுதேவர்-தரு.

பொருத்துப்பார்த்திடுமெந்தன் கருத்தையுமிந்திடாமல்
போகத்தடைசெய்வேனோ மடமானேபெண்ணே

பொது-வசனம்.

அதேதெப்படியென்றால் தேவகிஅம்மன் வசுதேவரிடத்தில் விடைபெற்றுக்கொண்டு தனது தமையனாகிய கம்சமகாராசனைக் கண்டு பணிந்துசொல்லுகிற விருத்தங்காண்க.

தேவகி-கொச்சகம்-புன்னாகவராளி.

சேனைவடமதுரை செங்கோல்அரசரும்
வீரதீர அண்ணா இப்படிக்குமான்சரணம்
போனதார்க்கொடுமை பிள்ளைகள்மேல்நீர் நினைந்து
தீராதகோபமுடன் செய்வதிது கோபந்தானோ.

வசனம்.

சரணம் சரணம் எனது அண்ணாவே யெனது பிள்ளைகள்மீது கொடுமையெண்ணி வில்லுத்திருவிழா பார்க்கும்படி அழைப்பித்து பிள்ளைகளைவிட்டு கொல்லத்துணிவது தர்மந்தானோ அண்ணாவே.

கம்சன்-கவி.

கண்டோமென்பசப்பிடுங்கள் காரியமெல்லாமுந்தி
சண்டாளன்சிசுவைப்பற்றி தப்பிக்கச்செய்தாளாய்
கொண்டுமென்பகைமுடிக்க கூடியகாலமிப்போ
தண்டனைசேரும்சொன்னேன் சமுகம்விட்டேகுவாயே.

வசனம்.

அடிவாடிசண்டாளி உங்கள்காரியமெல்லாம் முன்னதாகதெரிந்து பார்க்குறேன் என்னைக்கொல்லும்படி உன்வயற்றில் பிறந்த எட்டாவது பிள்ளையை நீயும் உன்னுடையகணவனும் சேப்பல்லையில் அசோதையிடம் சேர்த்து அவளுக்குப்பிறந்த குழந்தையை யெனக்கு காண்பிக்காமல் அந்த கிருஷ்ணனை தப்பிக்கச்செய்தீர் என்முன்னே நின்றால் தண்டனை சேரும் அப்புறம்போடி சண்டாளி.

தேவகி-தரு.

பிள்ளைகள்மீதினில் கோபம்அண்ணா
பெரியோர்க்கு யிதுமனஸ்தாபம்
பிரியாதேவரு மெத்தபாவம்-நீ
பெருமையாய் ஜோடித்தசாபம்
உள்ளமகிழகாட்டி துள்ளச்சிசுவைவாட்டி
ஓதும்பேறெடுக்காதே மேதக்கொண்டழிக்காதே

கம்சன்-தரு.

சண்டாளிபடுபேயே நீபோடிவெகு
சுருக்காகபேச வந்தாயேடி
என்னைதமையனென்று உறவாடிமுந்தி
தப்பித்திருக்க வகைதேடி
கண்டாலேவிடுவேனோ பின்னோரைத்தொடுவேனோ
கள்ளிவந்திடுபோகண்டு பிள்ளைப்பெருமைக்கண்டு

தேவகி-தரு.

நீதித்துக் கதிகாரரே-உமக்கு
தெரியாதயிது முன்டோமாரா-மெத்த
கொலைதசெய்யவே போரா-யின்று
தீராதபழிபாவம் சேராய்

பாசதேகமென்றெண்ணி பேசத்துணிவுகுன்னி
பரித்தவந்தேனேசேதி தெரிந்துக்கொள்ளும் அன்னே

கம்சன்-தரு.

அஞ்சாத தீர்க்குண சாலியேயம்
அந்தவந்தாய் படுகொலியுன்னை
அரிவேளையிலேவன் குடிகேடி
சின்னஞ்சிறுவன் கருக்கியே
வஞ்சகியுமேவன்று சஞ்சலமதுகொண்டு
வந்திடமனைக்கேதி னென்றிடமையந்தீர்

தேவகி-கவி-ஆரைக்கவைபாவி.

தர்மசாஸ்திரமறிந்தும் சதுர்வேதம்தாயுணர்ந்தும்
தர்மசுற்பிளைபோயிக்க சின்னபிள்ளைகள் தாயிந்த
மர்மமாயழைத்துக்கொல்ல வரும்பாவம்செங்கோலேந்தி
சிம்மாசனமெடுத்தகத்தி கேவலமாருந்தானே.

வசனம்.

கேளும் எனது அண்ணாவே தேவரீர் ஆயசாஸ்திரம் சாதுர் வேதம் அறுபத்துநான்கு கலைக்கியானமும் கற்றவர்க்கு இவனது பிள்ளைகளைக் கொல்லத்துணிவது நீதிசாஸ்திரத்துக்கு தகுதியல்ல அதினாலே அனேகபாதகம் வந்து சம்பவிக்கும் அந்த நீசத்துவத்தை விட்டுவிடு எனது அண்ணாவே.

கம்சன்-தரு.

ஏதடி கன்னிகையே யின்னமும் சொல்வதை கேளடி
எந்தனுக்கிந்த நீதிபோதமும் இல்லையடி
சுருள். பாதகியுந்தனைப்போல எமனைப்பெற்று
பஞ்சமிலையுந்தமே தெரியவந்தது
பாசமறுத்துமே கொத்திடகண்டேன்
நேசமதுமேவிமாமது கொண்டேன்

தேவகி-தரு.

என்னசெய்குவேன் உள்ளமும்வாடியே
தேக்குதேபோலவருகின்றமே கதிபிக்கிதொல்லவே
சுருள். சொன்னேனப்படி கோபம்வேண்டாம்
குலைத்துசெய்வது பொறுத்தவும்பாவம்
அடிக்குதே மனம் சொல்லியபடி
மடிக்கமனைத்தனை நினையவில்லேதட

கம்சன்-தரு.

கொல்லவந்திடும்போதுகள் அடுத்ததைப்பார்க்கவே
கூடாதென்றுமேசொல்லி மறிக்கவும்பார்க்கவே,

27

சுருள். கல்லதுஅவனையும் சாண்மடிக்காமலே
சாடியேயென்னிடம் பகைமுடிக்காமலே
ராமகிருஷ்ணனை விட்டிடுவேனோ
க்ஷேமமாகிய வெந்தனைக்கொல்லவும்

தேவகி-தரு.

இளையவயதினில் வேலியபேரைக்கொன்றவர்
எதிர்த்தசூரரை அதோகதம்செயித்தவென்றவர்
சுருள். உளமதுவெபாங்கியே யின்றுமடிக்கவோ
யோசனைசெய்துமே பகையைமுடிக்கவே
உறுதிசெய்வது மெவ்விதமாகுமோ
கருதிபார்த்திடக் காணவும்போகுமோ

கம்சன்-கந்தார்த்தம்-மோகனம்.

கேளடிகன்னி நீதான் கெம்பீரங்கொண்டென்னை
எளிதம்செய்யவந்த யிடப்பசங்களையும் நானும்
கோளரிசிங்கம் கண்டால் குலைகுலைந்துபதுங்குமென்று
வாளுக்குயிரை கொடுப்பேன்.

தரு.

வஞ்சகக்காரி யெதிர்த்துபேச நெஞ்சமும்தேரியே யெதிர்த்தாயிசை
சஞ்சலம்வரச்செய்த சதிகாரி படுபாவி
தாண்டிவந்தனைவாளால் வெட்டியெறிவேன்போடி

தேவகி-கந்தார்த்தம்-மோகனம்.

ஒப்பில்லாயெனது அண்ணா உருதியாய்நினைத்திருக்கும்
எப்படிவந்துமிதியிருக்குமோ யெவருக்காண
அப்படிதானே செய்யும் அருமைதப்பாரில்லை
சொப்பியமகனைக் கொன்று.

தரு.

சீர்பெற்றவராலும் உலகமெல்லாம் பேர்பெற்றவராலும் உலகமெ[ல்லாம்
ஆர்பெற்றுக்கொள்வாரோ அரசசெய்கோலெல்லாம்
அரியும்சிவனுமகின்று தெரியும்தெரியும் அண்ணா

வசனம்.

இப்படிக்கு தேவகிசெருப்பிடம்சேர ராமகிருஷ்ணன் உபயவனம் விட்டு யாதவர்களுடன்வந்து கம்சராஜனைக்காண வருதல்.

கிருஷ்ணன்-கவி.

தலையைபார்த்திடவில்சர்ப்பம் சயனமாய்ந்த்திடவாசிங்கி
பவனமாய்துணியனிந்த பரிமளவனத்தைவிட்டு

குவலயம்புகழ்மாமன் கொலுமனைதன்னைநாடி
சகலரும்புகழ்க்கிருஷ்ண தேவரும்வருகின்றாரே.

தரு-கல்யாணி.

ஜெபதபங்கள்முடித்து உபயவனங்கடந்து தேவதேவருமேவினார்
பலராமரும் கிருஷ்ணரும் தேவதேவருமேவினார்
சுபஜெயம்பாடியே துள்ளிவிளையாடியே
சருள். சோலைக்கிளிமொழி சேவக்கதிர்விழி
தோகையர்மிஞ்சவே போகதூரந்திர (ஜெபதப)

கோடிசூரியனென்ன குலுக்கப்பணிகள்மின்ன
பாடிவேணுகேழும் பதக்கம்பளபளென்ன
சருள். பாதகிங்கிணி வீரமணியுடன்
பத்தியாபாதமதில் சத்தமிட்டாட (ஜெபதப)

மதுரைவீதிசிங்காரம் மகிழ்ச்சியாகவேகண்டு
எதிரியைவெல்லும் ருக்ஷமதைக்கொண்டு
சருள். எத்திசையிலும் பேரிமுழங்கிட
இறையவனென்றுமே நிறையவேகூடி (ஜெபதப)

முன்னேமதுகையால் மோக்ஷம்பெறவேமேவிட
அன்னையுடனேவந்த அம்மானுடனேமேவி
சருள். ஆசைப்பெருகிட னேசத்துடன்
அண்ணனேயென்றுமே கண்ணனும்வோதிட (ஜெபதப)

வசனம்.

இப்படிக்கி ராமகிருஷ்ணன் உபயவனம்விட்டு கம்சராஜனை காணவர அந்த விசேஷத்தை அக்குருவானவர் கம்சராஜனுக்குத் தெரிவிக்க கம்சராஜன் சொல்வது.

கம்சன்-கவி.

அக்குருவப்பூபர்கேளாய் அதிசசந்தோஷங்கொண்டேன்
மக்குவமதிசின்ன பசங்களும்வந்திடத்தில்
தக்கவேயென்றுபட்டம் தந்தியைகிருத்திவைத்து
சிக்கவேபிடித்துக்கொல்ல செல்வமாயழைத்துவாராய்.

வசனம்.

அடா சேவலாளிகளே யெனக்கு சத்துருவாகிய ராமகிருஷ்ணன் வருகிறதாக கேள்விப்பட்டேன் நமது பட்டத்திலிருக்கும் பட்டத்துயானையை கொண்டுவந்து கோட்டை முகப்பில் நிறுத்தி ராமகிருஷ்ணனை யேவிமடிக்கத் திட்டஞ்செய்யுங்கள் சேவலாளிகளே.

யானைவருவது-தரு.

மதயானைவிநோதவக்காதே குவலயபீடம்
மதயானைவிநோதவக்காதே அதிரப்பூமிகள்நடக்க
அக்ருகக்கொண்டோடச்சமாவுத்தன்முடுக்க
கடிக்காதுமிகன்பிட்டியே சருபோலே
காலதிரென்னடையும் மாடடியே
வெள்ளிமலைபோல்சாடியே வெருமஞ்சலே
குண்டெவீழ்விடவேவாட்டியே வானைபூட்டிமோதியே
கண்டவிருகூதம்வராருக்கு விரோமயாமுறித்தே (மத)

வசனம்.

இப்படிக்கி ஆனையை கோட்டையில் நிறுத்தி யிருக்கும்போது கிருஷ்ணன் கண்டு பேசுவதன் மசொல்வது.

கிருஷ்ணன்-தரு.

மாவுத்தனே ஆனையை வழிவிலகித்திருப்பெண்று
நாலிராவிபார்ப்பதேதடா டுமாவுத்தனே
[illegible]

மாவுத்தன்-தரு.

விட்டதுதமாட்டேன்காக்க ளிலீயம்படைத்திருத்தால்
விட்டவர் நமதுராட்டுபொராடத கோபாலகிருஷ்ணா
கேட்டுவாசல் தாண்டமாட்டேமோ

கிருஷ்ணன்-தரு.

தாண்டிப்போகத்திருமுன்பு நான்மமாகச்சொல்லவந்தோம்
வேண்டாம்வெண்ணாசிக்கும்படிக்கு மாவுத்தனே
விட்டுவழி தாண்டுவில்லை

மாவுத்தன்-தரு.

சிங்குமிமன் அவிதாரத்தை நீங்களாசேனவிட்ட
சொல்லவும்கிலிர்த்தவியே கோபாலகிருஷ்ணன்
தாண்டயானை திரும்பாதே

கிருஷ்ணன்-[illegible]-மோசனம்.

பாயவுடன்வீர்தாரு யானைதன்னைப்பற்றி
ஒடுக்கும்பிக்கை நிலையிறுத்து
[illegible]
[illegible]
[illegible]
சக்கரம்வாங்கியே
ஆயமணிமாலை மதைக்காடியாட

தரு.

அம்பியைசுழட்டியடித்தேன் கீழேவேதள்ளி
கொம்புகள்ரெண்டையும் முறித்தேன்
அம்மாதனிலிருந்த ஆனைக்காவலனைக்குத்தி
ஆவலாககோட்டைதாண்டி போவோம்வாரும்அண்ணமாரே.

வசனம்.

கேளும் பொனது அண்ணாவே மதயானையை மடித்துவிட்டோம் இனிநாம் மாமாவைக்காண யாதொரு தடையுமில்லை அண்ணாவே.

தரு.

ஆசையானேனே மாமா நான் ஆசையானேனே
ஆசையாக நானிட்ட வீசுத்தனுகோலமெல்லாம்
பாசமாகஉனைக்கான நேசமாகவந்தோமிங்கே (ஆசை)

கம்சன்-தரு.

வந்தபோதே நீங்கள் வந்தபோதே
வந்தபோதுயென்கோரிக்கை முந்திபோயிடேரக்கண்டேன்
சொந்தகள்ளனாக வந்துவிந்தை வில்லைவொடித்ததென்ன.

கிருஷ்ணன்-தரு.

என்னகோலம் மாமா என்னகோலம்
என்னைகொல்லசெய்ததுநா உன்னைநாதயப்பவந்தேன்.
கன்னம்செய்யவைத்ததெந்நு வர்ணவில்லைமுறித்தெரிந்தேன்

கம்சன்-தரு.

ஒடித்தபோதே வில்லை ஒடித்தபோதே
ஒடித்திடவேஉங்களைநான் மடித்திடவேகோபங்கொண்டேன்
விடித்திடும்மல்லருடனே நாடித்துசண்டைசெய்குவீரே

கிருஷ்ணன்-கலி-கமாசு.

பிரியமாய்தனுவைகாட்டி பிரபலப்படுத்திஇங்கே
தெரியவேவரவழைத்து இங்குசெய்வாருமுண்டோ
சரிவிதுவல்லவென்று தப்பேறுமாமாசொல்லே
பெரியமல்லரைவிட்டாலும் பின்வாங்குணம்வாராதே.

வசனம்.

கேளும் பொனது மாமாவே பிரபலமான வில்லுத்திருவிழாவும் பார்க்கும்படி யெங்களை அழைப்பித்தது கொல்லத்தானிவது தங்களுக்கு இது மரியாதையல்ல நீர் பெரியமல்லரை விட்டாலும் எவர் வந்தாலும் பின்வாங்குணம்வாராது என் மாமாவே.

29

கம்சன் வசனம்.

ஆரடா காவலாளிகளே நமது இரண்டு புயபலம்படைத்த பராக்கிரமமுடைய சாணூரன் மல்லாரிய மிஷ்டிகரை அழைத்துவாருங்கள் சீக்கிரமே.

சாணூரன்-கலி.

சல்லடம்கட்டிக்கச்சை சடுக்கெனயிறுக்கிக்கட்டி
கொல்லவேகெட்டிமீறி குதித்துமேதோளைதட்டி
வல்லமைமீறிக்கூறி வனைதடிகயிர்கள்தாங்கி
மெல்லடிபாவித்துபோற்றி மிஷ்டிகர்வருகின்றாரே.

தரு.

மல்லர்வந்தாரே-சாணூர மல்லர்வந்தாரே
மல்லர்வந்தாசிநேர வல்லமைகாட்டியே
சல்லாபமாய்கம்சன் சமுகம்நாடியே (மல்)

கட்டிகட்டிசுத்து விட்டுயிறுக்கியே
சற்றுமஞ்சாமலே மீசைமுறுக்கியே
செட்டிகெட்டியென்று பேரைகுறுக்கியே
கிட்டஅரசனைக்காணவே வார்த்தைகள்கூறியே (மல்)

காலினிலேவீர வெண்டயம்பூட்டியே
கலகலவென்றுமே கிண்கிணிபூட்டியே
ஆலங்காலவிருக் கோதரம்பூட்டியே
அண்டர்கள்வாடவே தெண்டமும்மீட்டியே (மல்)

குதித்தெழும்பியே தோள்களைதட்டியே
கொண்டவிடிபோலே லக்கைகளைகொட்டியே
மதத்தயானையை தள்ளியேகெட்டியே
வல்லமைபேசியே கம்சனைகிட்டியே (மல்)

மல்லர்-கலி-தோடி.

வடமதுராபுரியையாளும் வள்ளலேமன்னர்கோவே
திடமுடன்கொலுவிருக்கும் திருவேபாதம்போற்றி
அடவுடன்யிச்சபைக்கு அழைத்திடும்காரணத்தை
தடுமிவில்யின்னதென்று சங்கதி உரைசெய்வீரே.

வசனம்.

சரணம் சரணம் மகாராஜனே தேவரீர் பாதாரவிந்தத்துக்கு தீர்க்க வந்தனம் எங்களையழைத்த விபரங்களை யின்னதென்று சொல்லும் மகாராஜனே.

கம்சன்-கலி-தோடி.

சண்டப்பிரசண்டனான சாணூரமிஷ்டிகரேகேளாய்
தண்டிக்கவரவழைத்த தனுர்யாகமிருஷ்ணன்தன்னை

தண்டிக்கவெதிரேநின்று தொடுத்தமல்லுகத்தாலே
கண்டித்துஅவர்கள்தன்னை காலனுக்கனுப்புவீரே.

வசனம்.

வாரும் மிஷ்டிகரே நீங்களென்ன அதிவேகமாக நடந்து ராம கிருஷ்ணனை மல்லுயுத்தத்தினாலே மடித்து எமலோகஞ் சேருங்கள் மிஷ்டிகரே.

மிஷ்டிகர்-தரு.

சண்டைக்கிவாடா கிருஷ்ணநீயும் சண்டைக்கிவாடா
அண்டைக்கிவந்தேனே அறியலைசாமியான்
அறிந்துக்கொள்ளடாவென்பேர் தெரிந்துக்கொள்ளடா

கிருஷ்ணன்-தரு.

பிடித்திழுக்காதேசண்டைக்கி என்னை பிடித்திழுக்காதே
இடத்தடச்சிதகிருஷ்ணன் தெரியாதகிழவனான்
செப்புமலைபோல்வந்தீர் எப்படிசெழிப்பேனான்

மிஷ்டிகர்-தரு.

வீரவில்லெடுத்தாய் கம்சன்வைத்த வீரவில்லெடுத்தாய்
போரானகுவலயபட தந்தையடித்தாயே
பெரியசமர்வித்தை தெரியாதென்றுசொன்று

கிருஷ்ணன்-தரு.

திசையெல்லாம்நடுங்கும் உந்தனைகண்டால் திசையெல்லாம்
பேசுவதெப்படிசொல்லும் இளையவயதுடைய
எந்தனைபற்றாதே தொந்திரவுசெய்யாதே

மிஷ்டிகர்-தரு.

பகடிசெய்யாதே எத்தனைகிஷ்டா பகடிசெய்யாதே
சகடனைமடித்தவனை தடிக்கிறிருக்கும்போது
சவுரியம்போச்சுதோ தவறிடைக்கும்போது

கிருஷ்ணன்-தரு.

குன்றுதேவாடா சண்டைக்கிவாரோர் குன்றுதேவாடா
மண்ணுறைபெண்ணுறை மண்ணுறும்பொன்னுறையும்
மறந்தவந்தவோரியும் தெரிந்துசொல்லடாபாவி

மிஷ்டிகர்-தரு.

எதிர்த்துப்பேசாதே எளிதவார்த்தை எதிர்த்துப்பேசாதே
கதித்ததோளைதட்டி வெட்டிவைத்துவிடு
கண்டிப்போனிந்த சண்டிபயலான

கிருஷ்ணன்-தரு.

விண்ணடையாதே துள்ளிகுதித்து விண்ணடையாதே
மண்ணிலிருந்துவாழ் வந்தவிதியிருந்தால்
மதித்துயெதிர்த்திடாமல் குதித்துபேசாதேபோடா

மிஷ்டிகர்-கவி.

எத்தனைசொன்னாலென்ன இளைப்பனோசமருக்கஞ்சி
குத்தியேஉனைமடித்து கொல்லுவேன்வாளினாலே
மெத்தவேகம்சராஜன் வில்லரிமுறித்துவிட்டாய்
சித்திரதம்பிணுலேசீக்ரமே அடிப்பேன்பாராய்.

வசனம்.

அடாவாடா யிடக்கிருஷ்ணு எங்கள் அரசனாகிய கம்சராஜன் வில்லை முறித்துப்போட்டு பட்டத்துயானையை மடித்தாய் உன்னை சும்மா விடுவதில்லை யிடக்கிருஷ்ணு.

சாணூரன்-தரு.

மல்லுசண்டைசெய்ய வெதிர்த்தான்தோளைதட்டி
கொல்லமனங்கொண்டு குதித்தேன்
சொல்லுமுன்னேயுன்னைகொல்ல துள்ளியேதோள்களைதட்டி
எல்லவரும்தானடுக்க கொல்லமனந்தேரினேன்

கிருஷ்ணன்-தரு.

வேண்டியமட்டும்துள்ளிபாராடா உந்தனுக்கஞ்சி
நாணுவேனோ கண்டுநேராடா
சாணூரமல்லனேவாடா சற்றுநேரந்தன்னிலுன்னை
காணவேகம்சராஜன் காலனுக்கிரைகொடுப்பேன்

சாணூரன்-தரு.

கிட்டிகிட்டிவந்தேன்பாரடா உனதுதோளை
தட்டிமுட்டி கிட்டேசேரடா
வட்டமாகவேசுழட்டி கட்டியேபிரண்டெழும்பி
கெட்டிகெட்டியென்றுசொல்லி அட்டியில்லையுன்னைகொல்ல

கிருஷ்ணன்-தரு.

துள்ளிதுள்ளிவந்து பிடித்தேன்பின்னிடவுன்னை
தள்ளிதள்ளிவோங்கி அடித்தேன்
வெள்ளிமலைபோலேவந்த கொள்ளிகண்ணுவுன்னையிப்போ
மெள்ளவேமடக்கிகீழே தள்ளியேமிதித்தெறிந்தேன்

சாணூரன்-தரு.

கண்டவர்கடுங்க விழுந்தேகிடந்துமீறி
 ஒண்டிசிம்பம்போலே யெழுந்தேன்
தண்டமாளங்கொண்டெழும்பி தண்டனேயுனைப்பிடித்து
 மண்டிலஞ்சுழட்டிவிசி கண்டசேவர்தானெங்க

கிருஷ்ணன்-தரு.

முந்திமுந்திலகுவெடுத்தேன் உந்தனைகொல்ல
 கெந்துபாய்ந்து வாரியடித்தேன்
உந்தனைவந்திடயிருவர்முகம் செந்தனல்பொறிபறக்க
 மந்திரகிரிபோலேசுழட்டி பந்துபோலேவிசிடவே

சாணூரன்-தரு.

தேரூடன்தேரினை தட்டியேயிருவர்களும்
 தாரூடனேதாரினை கிட்டியேயிருவர்
ஆளுடனேயாளரியா மீளவேசுமணடெழும்பி
 கோளரிகரியும்மீளவே யெதிர்த்தாப்போலே

கிருஷ்ணன்-தரு.

மெத்தமெத்தமீறி தள்ளியேன் பிடித்திழுத்து
 குத்திகுத்தி மேதள்ளினேன்
சுத்தவீரகம்சனிட சித்தமதுதான்வயங்க
 பெத்தனமல்லர்வர்தாயும் வெற்றிசெய்யனேமுன்னே

சாணூரன்-கவி-மோகனம்.

என்னடாகிஷ்டாநீதான் எளிதமாகவேபேசி
உன்னிடசமர்த்தையெல்லாம் உணர்ந்திடவந்தாயிங்கே
மன்னனைமடித்திடாமல் மதுரைபோரிடவந்து
அன்னிதமாகநீயும் அழியவேவேண்டாம்போடா.

வசனம்.

அடாவாடா இடப்பயலே இந்த பிரேருப்திருஷலகமும் கம்சராஜனென்று சொன்னதேயுண்டானால் திரிமூர்த்திகளும் கெல்லுவார்கள் நீயிருப் மடியவேண்டாம் தப்பித்து ஓடிப்போடா கிருஷ்ணா.

கிருஷ்ணன்-வசனம்.

அடாவாடாசாணூரப்பயலே நான் எதற்காக வந்தேனென்றால் அந்த கம்சராஜனையும் உங்களையும் எமபுரம் சேர்க்காமல் மதுரை விட்டு போகிறதில்லை எதிர்த்துவாடா பயலே.

சாணூரன்-தரு.

போடாவாடாவென்று எடாகோடம்சொன்னாய்
பொங்குக்கவிழவந்து குத்தினேனே

கிருஷ்ணன்-தரு.

வாடாவாடாவுந்தன் மதத்தையெல்லாமடக்குறேன்
மாராவீரியங்கொண்டு மொத்தினேனே

சாணூரன்-தரு.

மொத்தினேனிந்த சித்தடிப்பயலே
முடியாதுயென்னை வெல்லநீபோடா

கிருஷ்ணன்-தரு.

சத்துமறிக்காமல சாணூரபயலே
தப்பித்துக்கொள்ள வகைசொல்லடா

சாணூரன்-தரு.

சொல்லடாயெனக்குவகை புல்லடாநீமெத்த
துள்ளாதேஉன்னைக்குத்தி தள்ளினேனே

கிருஷ்ணன்-தரு.

நில்லடாயெதிர்வந்து வல்லாளக்கண்டனே
நீங்கவுயிர்விடவே தாக்கினேனே

சாணூரன்-தரு.

துள்ளிதுள்ளிஉந்தனை தள்ளிதள்ளியேநீமே
நடுக்கைஅடக்க கிட்டவந்தேனே

கிருஷ்ணன்-தரு.

கொள்ளிகண்ணனுவுன்னை துள்ளிப்பிடித்திழுத்து
கூத்தவுக்கிரையாக தந்தேனே.

பலராமன்-கவி.

சாரியாய்வந்தெதிர்த்த சாணூரன்தன்னைமாயன்
வாரியேமோதிகொல்ல வஞ்சனைமனத்துடிக்க
மீறியேயிடியைப்போலே வெகுண்டுமேயெதிர்க்கும்போது
பாரியதிரமுள்ள பலராமர்யெதிர்த்திட்டாரே.

வசனம்.

அதோதெப்படியென்றால் சாணூரன் மடிந்தபிறகு அவன் தம்பியாகிய மிஷ்டிகன் யுத்தத்துக்குவர அருகாமையில் யிருந்த பலராமர் யெதிர்ப்பது.



பலராமர்-தரு.

வந்தபெருமிஷ்டிகனே வெந்தனையெதிர்த்திடவே
வல்லவனே வந்துபாரடா
வெனதுயிரமில்லையென்று விம்பேசாடா

மிஷ்டிகர்-தரு.

சேருமென்றுவீரியனே பாரடாவெனதுயிரம்
சின்னபின்னமாக அடிப்பேன்
எவருங்காணசொன்னசொல்லை யாதுமுடிப்பேன்

பலராமர்-தரு:

வீரமுள்ளமிஷ்டிகனே நிரமேறவென்னைகொல்ல
மிண்டனேமனதுபதைத்தாய் தோள்களைதட்டி
துண்டனேகடிந்து வெதிர்த்தாய்

மிஷ்டிகர்-தரு.

எதடாஇடப்பயலேஇப்போது வதுக்கொண்டுவந்தாய்
இப்பழிவுடக்கனை மடிப்பேன்
கம்சராசன்மொழிதப்பாமல் பகையைமுடிப்பேன்

32

பலராமர்-தரு.

மூடனேகம்சன்குடி கேடாமடப்பயலே
மொத்தியோன்தோள்களை தட்டியே
சமுண்டெழும்பிவெற்றிசெய்ய வீரங்கொண்டேனே

மிஷ்டிகர்-தரு.

கோடையிடிபோலேதட்டி ஓடிவந்துஉன்னைகிட்டி
குத்திகுத்திகிமேதள்ளினேன்
சபாஷெனவேமெத்தமெத்த மீறிதள்ளினேன்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
27 NOV 1911
MADRAS.

பலராமர்-தரு.

மீறிவந்தவீரமெல்லாம் பேரிடிமுழக்கமாக
மிக்கமிக்கவேங்கியடித்தேன்
கோபமிகுந்துதிக்கிடவுன் வாயிலடித்தேன்

மிஷ்டிகர்-தரு.

மிடில்லாவீரபானஷ கோடிகோடியாகபேசி
என்னமத்துவந்ததேதடா
உனக்குமனம்குண்ணவந்த போகுதேதடா

பலராமர்-கவி-தோடி.

விண்ணவர்கடுங்கவந்த மிஷ்டிகநிராகேளாய்
அண்ணனையெனதுதம்பி அடக்கியேமடிக்கக்கண்டு
வண்ணங்கள்பேசவந்தாய் மதகிரிதுரியைக்கொல்ல
என்னம்போல்வெதிர்த்து உன்னைஎமகிரிசேர்ப்பேன்பாராய்.

வசனம்.

அடாவடா மிஷ்டிகனே உனது அண்ணனை எனது தம்பியா
கிய கிருஷ்ணன் மடித்திருக்க சற்றுவது மறியாமல்வந்தாய் உன்னை
சற்றுநேரத்தில் எமகிரிசேர்ப்பேன் பாரடா மிஷ்டிகனே.

மிஷ்டிகர்-தரு.

கொடியகாலனைப்போலே மீறிகோபமிகுந்தனே
அடாகோபமிகுந்தனே
குதித்துஉன்னிடமதத்தை அடக்கபுரந்தாவடித்தேனே

பலராமர்-தரு.

இடித்தபோதுகரியைமலையை அனந்தமாகவே
அடா அனந்தமாகவே
என்னரிஉந்தனைமண்ணில் விழவேயெதிர்த்துகுதித்தேனே

மிஷ்டிகர்-தரு.

குதித்தெழும்பியேபிடித்து உந்தனைபெடுத்தெறிக்தேனே
அடடாபெடுத்தெறிக்தேனே
கொஞ்சப்பயலே அடிப்பேன் பாடாபஞ்சம்பரக்கவே

பலராமர்-தரு.

பாக்கபல்லும்பிரக்கவாயும் பதறிக்குத்தினேனே
அடடா பதறிக்குத்தினேனே
பம்பரம்போலேசுழட்டிஉந்தனை தெம்பைஅறித்தேனே

மிஷ்டிகர்-தரு.

பதைத்துநொக்தேனே யெதிர்த்துமேஉந்தனை
பதைக்கமீறியே வதைக்கவந்தேனே
குதித்துமேமனம் குதித்தெழும்பியே
கொடுக்கற்றுறை யெடுக்கசத்தமும்

சருள். குடலதுசரியவும் முடலதுநெரியவும்
விடமதுபோலவே திடமதுகொண்டோர்

பலராமர்-தரு.

குதித்தெழும்பியே பிடித்துசாய்த்தேனே
கோலாகாலனாய் காலால்தேய்த்தேனே
சதைபதுஉந்தனை நடுத்துவாட்டியே
தடுத்துவீரியம் யெடுத்துகாட்டியே

சருள். சதையதுபிதிர்பட நிரமும்பெருகிட
அதிரவேபூமியும் பதறியேமீறிட

மிஷ்டிகர்-தரு.

கடுத்துஉந்தனை யெடுத்தெறிக்தேனே
கசக்கிமீறியே மிகசுகிக்கவந்தேனே
தடுத்ததோள்களை கொடுத்துகாட்டியே
சனத்திடமனம் பதைத்துவாட்டியே

சருள். சரிசரியென்றுமே தெரியநின்றுமே
முரியஅடிக்கவே யிருவிற்றெடுக்கி

பலராமர்-தரு.

விடுத்தகம்சனும் அடித்துவரடவே
விதித்துதோவிதி யெதிர்த்துவாடவும்

33

கடுத்துஉந்தனை பிடித்துக்கொல்லவே
அதித்ததோள்வலி நதித்துசொல்லவே

சருள். கண்டனேசலமது விண்டலர்நடுங்க
அண்டருமாமலர் கொண்டுசொரிந்திட

பொது-வசனம்.

அகோதெப்படியென்றால் ராமகிருஷ்ணன் வந்த மிஷ்டிகரையும் மடித்து கம்சராஜனைக் கண்டு யேதென்றுசொல்வது.

கிருஷ்ணன்-தரு.

எதிர்த்துவருவாரில்லை எங்கள்கோபமாறவில்லை
இதற்குபதில்சொல்லுவீர் என்மாமாவே

கம்சன்-தரு.

இடிபோலேஹுங்கரித்து எடுத்தேன் ஆயுதங்கையில்
வளிதம்பேசவந்தீர் அடபோடா துஷ்டா

கிருஷ்ணன்-தரு.

துஷ்டக்கோபத்தைக்காட்டி சுருக்காகொல்வேனுவி
ஞூர்களெங்கேபோனார் மாமாவே

கம்சன்-தரு.

எங்கும்நடிக்கவந்த யிடைப்பசங்கள்நீங்கள்
எதிர்த்துயேளிதம்செய்ய விடுவேனோபோடா

கிருஷ்ணன்-தரு.

விடுவதென்னஉந்தன் வீரியம்செலுத்தாமல்
விருதாவாய்போவதுண்டோ மாமாவே

கம்சன்-தரு.

போவதேதும்துரை பூரிவந்துதப்பி
போரத்கோலங்கொண்டுகளை மடிப்பேனேதுஷ்டா

கிருஷ்ணன்-தரு.

மடிப்பேனென்றவிருதா வார்த்தைகள்பேசுவீர்
மடிவதியேதுவோ அதைப்பாரும்மாமா

கம்சன்-தரு.

பாருமென்றுசொல்லவும் பார்க்கலாம்நொருகையில்
பதுங்கியிருப்பதுண்டோ அடபோடா துஷ்டா

கிருஷ்ணன்-விருத்தம்-கருணையக்கிரியை.

சங்கரும்பிறந்தகாளாய் கடியோர்களும்சொல்ல
அங்காயமிருவரைக்கும் சூரதந்தவழங்கடக்காட்டி
சங்காரமல்லரையுமாளி தவிர்த்துமேனியர்த்தெங்களை
போங்காலமிப்போடுமென்று புத்தியிலமிக்குயாரும்.

வசனம்.

கேளும்மாமாவே காக்கள் பிறந்தநாள்முதல்கொண்டு எங்களை கொல்லவதற்கன்றி யேதேதோ தந்திரம்செய்தீர் இப்போது எங்களை யிவ்விடம் அழைத்து நீர் என்னயிருக்கிற எண்ணம் நிறைவேறாது என் மாமாவே.

கம்சன்-தரு-ஆனந்தபைரவி.

இடைப்பசங்களாயிப்படி யேளிதம்செய்யவே
எடுத்தேன்ஆயுதம் உங்களைசாடிக்கொல்லவே

சுருள். அடாப்பசங்களா முடாதே
அசக்கியவர்களும் கூடாதே
அரியவேயெவரும் கரிங்கவாட்டுவேன்
தெரியவேயென்வீர நிக்கல்வாட்டுவேன்

கிருஷ்ணன்-தரு.

இப்படிபேசவும்தகாதுக்கு யிதமல்லாதேயோ
ஏளிதமென்னை நீயெங்களை யெதிர்த்திடப்போமோ நீயோ

சுருள். எப்படிக்கண்டாய் நீ இடையனென்றெங்களை
எதிர்த்திடாமலே விடுவேனோவுன்னை
எத்தனையெதிர்க்கவும் என்னாலாம்கொள்ள
வித்தைபாய்வர்ந்திடும் விதியதைபாரும்

கம்சன்-தரு.

குதித்தாயீரியேயெங்களை யேளிதம்சொல்லவே
கோபமிருக்குதேயிப்படியே உங்களைகொல்லவே

சுருள். வதைத்துயெவ்விட பகைவரைமுடிப்பேன்
வந்தனேபெருந் தோள்களும்முடிக்க
மல்லரைவாட்டிய மதமிதுகாணே
நல்லமையழிந்திட வந்ததுகாணே

கிருஷ்ணன்-தரு.

முடிவுகாலமும்வந்து வடுத்தது முன்னமே
மாமாசொல்வார்த்தைகள் விட்டு பிழைத்திடும்சொன்னனே

34

சுருள். முடிவுகாலம் வந்திடும்போது
முன்னும்பின்னுமே தோணுவதேது
நீர்க்கமாகவே யெங்களைதிட்ட
சேர்க்கவந்தேனே யெமகிரிகெட்ட

கம்சன்-கலி-முகாரி.

இந்திரன்தடுத்திட்டாலும் யெமன்வந்துயெதிர்த்திட்டாலும்
மந்திரகிரியைத்தாங்கும் மாயவன்யெதிர்த்திட்டாலும்
தந்திரத்துடனேவெல்ல தயிரியமெனக்குமுண்டு
அந்திரம்வேகவீசி அடிப்பேனுன்பந்தாகத்தானே.

வசனம்.

அடாவடா இடைப்பசங்களா. இந்திரன் எமன் மந்திரகிரி பருவதத்தை கூர்மமாகத்தாங்கிய மகாவிஷ்ணு வந்தெதிர்த்தபோதிலும் உன்னைப்பிடித்து தரதரவென்று சுழட்டி ஆகாயமார்க்கமாக வீசி தாழ்ந்து வரும்போது பந்தாகபிடித்து அடிப்பேன் பாராடா பயலே.

கிருஷ்ணன்-தரு.

வீசிப்பந்தடிப்பாய் கடிந்துமீசி
வெகுபகைமுடிப்பாய் கடிந்துமீசி
நேசமாய்அடிப்பான் எமனும்இந்திரன்நோகவே
அடிப்பார் எமனும்இந்திரன்

சுருள். நேசிப்பாய்யெங்களை நீகொல்லமுடியாது
நேரம்செல்லாமலே பொழுதுவிடியாது
கூசாதுமாமலே துரும்பாவிடியாது
துரும்பாலதுவந்து பூமியிடியாது

கம்சன்-தரு.

தேவர்கள்ஒடுங்க வாருதியேட்டும்
திசையெங்கும்கெங்க வாருதியே
மூவரும்மடங்க தவமிருந்து
முனிவர்கள் வேரடங்க

சுருள். மேவியயென்வீரம் சூரத்தைக்கொண்டாட
வீரசிங்கத்தை மதயானையெதிர்ப்பாட
தாவியவிதம்போக தந்திரம்செய்தேட
தவிடுபொடியாக அடிப்பேன்ரதம்தேட

கிருஷ்ணன்-தரு.

பகைகொண்டுமுனைத்தாய் யெங்களைக்கொல்ல
பலதந்திரம்விளைத்தாய் யெங்களை

புகைகொள் துலுக்காய் துணிக்குயிப்போ
போர்செய்யவினைத்தாய் துணிந்தயிப்போ

சுருள். கைகொண்டதிடமது கடுங்கிமுழிக்காதே
ராஜபோக்கியம்பெற்ற முற்றிமையமுழிக்காதே
வகையில்லாமஇல்லைகண்டு எங்களையெதிர்க்காதே
வருமைக்குலைக்கிடக் காலத்தைகழிக்காதே.

கம்சன்-தரு.

கொஞ்சமாகினைக்ககோப மிருக்குதுகொண்டேனே
துணிக்ககோபமிருக்கு கொண்டேனே
அஞ்சவே துணிக்க உக்கனே
காலும்அழிக்கவே முனைக்க

சுருள். பஞ்சையேயினிக்கங்கல் வீரியம்செல்லாது
பகைக்காதேகுதிக்காதே என்கோபம்பொல்லாது
சஞ்சலம்வரும்டக்கள சவுரியம்செல்லாது
தருதலைபோடக்கள் சமுத்திரம்மேலெல்லாது

கிருஷ்ணன்-கவி.

மலையெடுத்துகுடையாய்பிடித்து மருதமரம்சாய்த்தேன்
மாய்கையாய்வந்திடும் பூதகிசகடனைக்கொன்றேன்
குலையெடுத்துசெய்யவந்த பேரைவென்றேன்
குவலயபட்சிடமேமிஷடி கரையுங்கோவுசென்றேன்
சிலையொடித்துவந்ததெல்லாம்யோசிக்காமல்
திருடனென்றும்இடையனென்றும்வீணும்பேசி
நிலயிருக்குவந்த மதியிதுவேசவென்று
நெஞ்சுருகிநோக்கு மனமாகினேனே.

வசனம்.

, கேளும் மாமாவே காங்கள் பிரக்தாளக பெங்களைக் கொல்லும்படி சகடாசுரன் பூதகி தேனுகன் கைகேசி முதலானவரையும் அனுப்பிவைத்தீர் அவர்கள் திரும்பி வந்ததேயில்லை அதுவும் தவிர கோவர்த்தனகிரியை குடையாகப்பிடித்து யிரண்டு மருதமரங்களையும்சாய்த்தேன் உமது பிரசண்டமான வில்லையுமுறித்து பட்டத்தானையும்மடித்து மிஷ்டிகரையும் கொன்றேன் யிதுகளெல்லாம்தெரிந்து யெங்கள்மீதுகொண்ட பகையைவிட்டு பிழைக்க வழிதேடும் மாமாவே.

கம்சன்-தரு.

என்னையெளிதம்யெதிர்த்து பேசவேஅடடா துஷ்டா
பெண்ணமத்துவென்னை திருடியஅடடா துஷ்டா

கிருஷ்ணன்-தரு.

திருட்டுதனமாயழைத்து யெங்களைஅடாகம்சா
தேடலாகுமோகேடு காலத்தைஅடாகம்சா

கம்சன்-தரு.

கால்கடுக்கும்நீரானடா அடாதிருட்டுகிருஷ்ணா
கடிக்குபேசவேயெடுத்தேன் அடாதிருட்டுகிருஷ்ணா

கிருஷ்ணன்-தரு.

எடுத்தஆயுதம்யெங்களை கொல்லுமோஅடாகம்சா
யென்னடாவீணாய்நாண்டி குறிக்கிறாய்அடாகம்சா

கம்சன்-தரு.

குதித்தெழும்பியேகோப மிருக்கேதனே அடா திருட்டுகிருஷ்ணா
கொல்லத்துணிக்துவில்லை வளைத்தேனே அடாதிருட்டுகிருஷ்ணா

கிருஷ்ணன்-தரு.

வில்லையெடுத்துவீறமடக்க அடாகம்சராஜா
வீணுமாண்டுபோசகாலமோ அடாகம்சராஜனே

கம்சன்-தரு.

மடிக்கவேமனம்துடிக்கவந்தேனே அடாதிருட்டுகிருஷ்ணா
வாரிசுருட்டிமோதிஅடித்தேனே அடாதிருட்டுகிருஷ்ணா

கிருஷ்ணன்-தரு.

மோசியடித்துமோக்ஷங்கொடுக்கவே அடாகம்சராஜா
மூலமறியவேகாலம்வந்துதே அடாகம்சராஜனே

கம்சன்-கந்தார்த்தம்-மோகனம்.

மூலத்தைஅறிவேன்சின்ன மூளைப்பிலேஉன்னைக்காட்டி
வேலத்தவிதிகடத்த வெகுமத்தாலடியும்பட்டடாய்
பலத்தையறிவேன்பெண்கள் சேலையைத்திருடுங்கள்ளா
கோலத்தை அழித்துக்கொல்ல.

தரு.

கொண்டுகோப மீறியேயெழுந்தேன்-பகைமுடிக்க
கண்டுநீங்கள் அஞ்சவிழுந்தேன்
அண்டரும்மதிகலங்க ஆலகாலம்போலெழுந்த
மண்டலம்நடுங்கும்படி மாட்டிநானிந்நிலையிலம்பு

கிருஷ்ணன்-கந்தார்த்தம்-மோகனம்.

எதிர்த்திடகோபமீறி யிட்டிபோல்துக்கரித்து
விழித்திடும்விழியினாலே வெல்லவேமனதுதேறி
பகைத்திடக்கம்சன்வீரம் பகைபதுமுடிக்கயின்று
குதித்துமே கறத்தைவோங்கி;

தரு.

குத்திவுன்னைக் கொடுமடித்தேன்-தேவர்களஞ்ச
எட்டியேசிகையைபிடித்தேன் தேவர்களஞ்ச
வட்டமாகசுத்திசுத்தி மாளவேயிழுத்தெறிந்து
விட்டுமேயெவருங்காண வெற்றிசெய்யவீரங்கொண்டேன்

பொது வசனம்.

அகோதெப்படியென்றால் கம்சராஜனை பகவானானவர் மடித்து ஆகாசிமோக்ஷம் தர தேவர்களெல்லாம் புஷ்பமாரிபொழிய அவன் தம்பியாகிய சகோதரன் யெட்டுபேரும் சுனுபுராஜனும் சபைக்கு வருகிற விதங்காண்க.

சுனுபுராஜன்-கவி-மோகனம்.

படையுடன்பெரியாட பலவகைவிருதயாிந்து
கடைவிழிபொரிபறக்க கதிர்முடி தமயன்தன்னை
இடைகுலகிருஷ்ணன்கொல்ல வென்னமத்தையறியவேண்டி
தடைபடசுனுபுராஜன் தம்பியும்வருகின்றாரே.

36.

தரு-சாவேரி.

சுந்திரவடிவான யிந்திரர்தேவர்களிக்கும் சுனுபுராஜன் வந்தான்
வெகுவீரியதிரன் சுனுபுராஜன்வந்தான்
சந்தமலர்வாடையும் கமகமவென்றுவீச
சரணம். காளசின்னமும் மேளவாத்தியம்
தாளந்தம்புரிதையலராடிய (சுந்திர)

ரணபேரிகையும்மார்பில் ரஞ்சிதமவர்கள்வீச
சனுவரராமகிருஷ்ணனை சமர்த்தையறிவோமென்று
சரணம். தந்திரமும்பல சுந்திரசேனையுடன்
விந்தையாய்சூழ்ந்துமே வந்தநதாமு (சுந்திர)

வெற்றிக்கொடிபடைத்தவேந்தனையும்மடித்த
சித்தம்பைப்பேனேவென்று சிரேகர்ப்பமாகி
சரணம். சென்னியில்நவமணி உன்னிதபலபணி
மின்னேசொலித்திட வண்ணமதாக (சுந்திர)

முர்முரசுகள்பூரிமுழக்கும் டமாரம்பேரி
செம்மையுடனேமீரி சிகைதமிகவேதேறி
சரணம். பிரணிமன்னரும் பேரணிராவிய
தாரணிதன்னிலே மாரனுமென்ன (சுந்திர)

சுனுபுராஜன்-தரு-மோகனம்.

வீரவில்லெடுத்துகுதித்தான் சுனுபுராஜன்
மீரிமீரியேபல்லைக்கடித்தான் சுனுபுராஜன்
ஆரபாரம்கொண்டெழும்பி வீரசூரனானமெங்க
சூட்டிவில்லைவீரங்கொண்டு வாட்டவேகிருஷ்ணன்கண்டு (வீர)

தம்பிமார்வந்து கவியறதமுடனே
தும்புருசேனை குவியரதமுடனே
உம்பர்சள்மதிகலங்க உச்சிததமயன்தன்னை
தெம்புடனேகொன்றவனை. தீரனைவெல்லுவேனென்று (வீர)

மாட்டிடையர்மக்களல்லவோ அவரையிந்த
காட்டில்தீவரம்சொல்லவோ அவரை
ஆட்டியேபம்பாய்போலே யேற்றியேபடைநெருங்க
அப்புரம்போகாமல்கண்டு யிப்பவேகொல்லுவேனென்று (வீர)

கைதண்டம்தனையெடுத்தேன் குதித்துமீறி
கண்டியேசிதற அடிப்பேன் குதித்துமீறி
வேண்டியென்னைசம்மதிக்க மிக்கதேவர்மெச்சிடவும்
விட்டிடவும்மாட்டேனினி கெட்டியிதுசொன்னசொல்லு (வீர)

சுறுபுராசன்-கவி.

இந்திரபோகப்பெற்ற வெங்களன்றுவைமீறி
தந்திரத்தாலேகொன்ற தருதலேராமகிருஷ்ணர்
சுந்திரதோள்முடிக்க சுறுபுராஜன்கோபமீறி
அந்திரதேவறஞ்ச அருஞ்சமர்செய்குவாயே.

வசனம்.

அடாவாடா இடப்பயலே எனது அண்ணுவை தந்திரமாகமடித்த தருதலே கிருஷ்ணா உன்னே சற்றுநேரத்துக்குள்ளாக யெமபுரி சேர்க்காவிட்டால் யென்பேர் சுறுபுராஜனல்லடா கிருஷ்ணு.

கிருஷ்ணன்-தரு.

இளையமாமாவே மீறிபோலாமிபோகிது
சநிபோயென்னையெதிர்த்து மடிந்திடவே இளையமாமாவே
கிளேயோதுறுக்குமாம் கிழேபட்டிருக்க
கெட்டநில்லேபோமாமா வாட்டமாகியெதிர்க்க

சுறுபுராஜன்-தரு.

கொடிபெற்றயெக்களன்னவனேமடிக்க மனத்துடிக்க
உன்கருவமடக்கவந்த கொடிபெற்ற
அடியற்றமரம்போலே அலரிசுழண்டேவிழ
அதிர்தாண்டியேமண்கட சிதறஅடிப்பேன்பாரும்

கிருஷ்ணன்-தரு.

தாங்காதகோபம் கொண்டுமேயெதிர்க்க தாங்காத
உன்னேவயதக்கத் தருணத்தருணமிது
நீங்களிருவரொண்ணுநேசமசெய்தெங்களே
நித்தியாணயென்னவிடாமல் புத்திகொஞ்சமுமில்லே

சுறுபுராஜன்-தரு.

ஓதாதேயன்பெருமையை அடாவிடையா
கெட்டமடையாஉன்னே விடுவதேதுகம்மா ஓதாதே
போகாதேகாலத்தாலே புகழ்மதுவாக்கிவைத்து
போகாமலேயென்னையிலே சாகதலிவிதியோ

கிருஷ்ணன்-தரு,

நெறிகெட்டவீரம்பேசி கெலிக்கவேவந்தீரும்
மதிகெட்டகம்சனுக்கு மல்லமாவுத்தனுக்கு நெறிகெட்ட
விதிவிட்டதில்லேயென்று விருதாவாகேமாமா
அதியிதோமாமாவென்று சமுத்துவகள்பேசவேண்டாம்

வசனம்.

கேளும் இளையமாமாவே புத்தியில்லாத கம்சனுக்கும் மல்லமாவுத்தனுக்கும் நேரிட்டவிதியை யோசித்துப் பாராமல் எங்களே எதிர்ப்பது சரியல்ல இன்னம் சிலகாலம் பூமியிலிருக்க நினைத்துப் பாரும் மாமாவே.

சுறுபுராஜன்-தரு.

பேயாயிதுவென்ன சொல்லடா
நீ பெரியவனே யெதிர்நில்லடா
ஆயர்பாடிதன்னில் ஆடுமாடுகள்மேய்த்து
அத்துபத்துயில்லாமல் மத்தாலடியும்பட்டாய்

கிருஷ்ணன்-தரு.

ஆயன்சமத்தைநீ பாரடா துஷ்டா
ஆண்மையிழ்விட்டு போடா
ஆயர்பேயனென்று அதுவிதமரியாமல்
அறிவுகெட்டுதேசொல்ல பரிவுவிட்டுநேரவல்ல

சுறுபுராஜன்-தரு.

கொல்லாமல்உங்களே விடுவேனோயிந்த
குவலயமெதிர்த்தாலும் விடுவேனோ
சொல்லாதுசொல்லிய துஷ்டபசங்களா
துண்டிக்கஆயுதமும் கொண்டுகைகுதித்தேனே

கிருஷ்ணன்-தரு.

குதிக்காதேயெதிர்வந்து சண்டனேயிப்போது
கொல்லவேமனதின்புல் கொண்டேனே
மதிக்காதபேர்களே மாளச்செய்துகொடுத்து
மல்லையத்தாக்கித்தரும்பால் நிலேநிற்கும்போது

சுறுபுராஜன்-கவி.

அண்டமும்நடுங்க சராசரப்பூமிக்கெல்லாம்
அண்டமும்நிடுக்கிட்டோய்க அதட்டியேகொக்கரித்து
தண்டமும்காத்திலேரி தாண்டியேகுதித்துமீறி
மண்டையும்சிதறத்தாக்கி மடிக்கவேயெதிர்த்திட்டானே.

வசனம்.

அண்டாண்டபுவனமும் யீரேழுபதினுலுலோகமும் அதிரும்படி யிதோ கெதாயுதமெடுத்தேன் உன் மண்டையை சிதரும்படி அடிக்கிறேன் பாரடா கிருஷ்ணு.

கிருஷ்ணன்-தரு.

தண்டமெடுத்துவில்லே சுழட்டியே ஓ சுறுபுராஜனே
தாண்டிவந்திடவேண்டி யெதிர்த்தேனே ஓ சுறுபுராஜனே

சுறுபுராஜன்-தரு.

எதிர்த்துவந்துகுதித்து விசாரய் — அடா யாதவா
உனக்கெலிக்க தருணமாச்சுதே — அடா யாதவா

கிருஷ்ணன்-தரு.

பேச்சுதன்னிடபேச்சு மடங்கவே — அடா சுறுபுராஜனே
அனர்த்தம்செய்யவே சனத்தப்படைகளை — அடா சுறுபுராஜனே

சுறுபுராஜன்-தரு.

படைகள்மடிய இடிபோல்தட்டியே — அடா யாதவபயலே
புதைக்கவேபாணம் வதைக்கயேவினேன் — அடா யாதவப்பயலே

கிருஷ்ணன்-தரு.

ஏரியகரக்களெல்லாம் எக்கணைபணிந்தநிற்க
தேவனென்றறிந்திடரமல் சிறுமாயன்களைநொடிக்க
தாவியேடங்கள்ன்றைன் தன்னிடம்சோகமென்று
ஆவியுமிறிக்கவேண்டி அறியவேசொல்கின்றாரே.

தரு.

ஆலகாலம்போலவேமீறினேன் உங்களைப்பற்றி
சூலகாலமாகநேரினேன் உங்களைப்பற்றி
ஓலமிட்டலறியெல்லாம் உங்களைமுட்டிமோதி
காலனுக்கிரைகொடுப்பேன் கண்டுதேவர்தான்துதிக்க

பொது-வசனம்.

அகோதெப்படியென்றால் சுறுபுராஜன் முதலான எட்டுபேரை யும்மடித்து ஜெயம் ஜெயமென்று புஷ்பமாரிபொழிய அந்த சமயத்தில் கம்சராஜன் தேவிமார்கள் கேள்விப்பட்டு வருகிற விதங்காண்க.

அஷ்டத்தி-பிராசத்தி-கவி.

மன்னவர்மடிந்தசேதி வருத்தமேதமக்குகந்த
கன்னியர்சொல்லும்போது கலகலத்தவரிவிழ்ந்து
என்னநும்செய்வோமென்று ஏங்கியேமனமுருகி
அன்னியகம்சன்தேவி தோகையும்வருகின்றாளே.

தரு.

நானையோராங்களென்றுசெய்வோம் என் அக்கமாரே-தங்கைமாரே
என் ஆண்முகன்மாண்டாரேடி.
அன்னநடைமாதர்களா என் — அக்கமாரே-தங்கைமாரே
என் அருமைமன்னர்மாண்டாரேடி.
கொற்றவனர்மாண்டிருக்க என் — அக்கமாரே-தங்கைமாரே
கொண்டைப்பூசெண்டேதாக்கடி.

முத்துமாலைமார்பதக்கமென் — அக்கமாரே-தங்கைமாரே
மூக்குத்தியேதாக்கடி
சிவப்புத்தர்மாண்டிருந்தான் — அக்கமாரே-தங்கைமாரே
சிர்பணிகள்யேதாக்கடி.
தாவடங்கள்கொத்தசாட்டென் — அக்கமாரே-தங்கைமாரே
தண்டைபீலியேதாக்கடி.
பொட்டுள்ளாயிருந்தோம் என் — அக்கமாரே-தங்கைமாரே
பூச்செண்டுகோதாக்கடி.
விட்டெறிந்தம்பணிகள் என் — அக்கமாரே-தங்கைமாரே
மெல்லியரே ஓடிவாருங்கள்.

அஷ்டத்தி-கவி.

ஓடியேமாதரெல்லாம் உருகியேகலங்கிநெஞ்சம்
வாடியே அலறிவிரைந்து மன்னவன்மேல்விழுந்து
மிடில்லாசிறவர்கையில் மிரந்திரோ அய்யோவென்று
கூடியேகண்ணீர்சோர கோவென்றுபுலம்புவாளே.

தரு.

அன்றனாரவென்னசெய்வேன் உந்தன்கதிர்முடி அரசைவிட்டு
மண்ணுலகைநீக்கியே விண்ணுலகைப்போனீரோ
மன்னவாவென்ன செய்வேன்
தங்கவதனமிக்கரூபா நாட்டிகவிரியனே
எங்களைநீக்கி மங்களஞ்சேர்ந்தீரோ
எந்தகாலம்காணுவேனோ என்மன்னவா
ஆசைக்குகந்தவரேமிக்க அழகுள்ளநாயகரே
தேசம்மெங்கவே செங்கோல்செலுத்தியே
நீரனேயென்றுசெய்வோம்
தேவிமார்கள்சொன்ன அந்த சேதிதனை அதற்கு
ஆவியழிக்கவும் பிரமன்விதிகாணோ
ஐயையோ யென்றுசெய்வோம்

வசனம்.

இப்படியாக கம்சராஜன் தேவிமார்கள் பகவானைக் கண்டு துதிப்பது.

அஷ்டத்தி-தரு.

தேவதேவனேதேவகி செல்வபாலனே
தேடிவந்துபாதங்களை கோடிசெய்தோமே

கிருஷ்ணன்-தரு.

கூடிகொத்திடுகன்மை தேடிவந்திட
குற்றமென்றுசொல்லலாமோ உத்தமிகளே

அக்குரூர்-தரு.

சக்கிரவர்த்திரோஹணத்தை பெற்றமைந்தரே
தாவிலையருள்தவந்த மூலகாரணா

கிருஷ்ணன்-தரு.

மூலம்சொல்லவேயிது காலமல்லவே
மோக்ஷம்சேரகேட்டபடி காத்திருந்தோமே

அக்குரூர்-கவி.

உம்மிலும்பெரியோரித்த உலகினில்லொருவரில்லை
செம்மையாய்தெரிந்துக்கொண்டோம் தேவதேவியாபால
அம்மனிவெங்கள்ரோத்தி அருள்தவத்தாலேயெங்கள்
வம்மிஷம்தனிலுதித்த மருகனேபாதம்போற்றி.

வசனம்.

அகோ சரணம் சரணம் அகிலாண்டகோடி பிரமாண்டநாயகராகிய ஆதிமூலக்கடவுளே இந்த உலகத்தில் தங்களுக்கு மிஞ்சின தெய்வம் வேறேயில்லை யெங்கள் சாத்தியாகிய தேவகியம்மன்செய்த தபோபலத்தினாலே யெங்கள் வம்சத்தில் உற்பனமாகி வந்த மருகக்கடவுளே தேவரீர் பாதாரவிந்தத்துக்கு வந்தனம் சுவாமி.

கிருஷ்ணன் வசனம்.

ஆயம்மா மாமிமார்களே நீங்கள் இந்தபூமியி லிருக்குமளவும் சுகசீவியாய் வாழக்கடவது உங்கள் அரண்மனை சேருங்கள் மாமிமார்களே.

கிருஷ்ணன் வசனம்.

அடா வாடா மாதவா நீ அரண்மனைசென்று யென்னுடைய பாட்டனாகிய உக்கிரசேன மகாராஜனை அழைத்துவாரும் மாதவா.

உக்கிரசேனன்-கவி.

மைந்தனால்சிறையிருந்த வம்மிஷந்தன்னை நீக்க
நந்தனும்வரவழைக்க நர்மணிஅலங்கரித்து
வந்தனம்திருமாலுக்கு வணங்கியேபூசைசெய்து
சிந்தையும்மகிழ்ந்துஉக்கிரசே னனும்வருகின்றாரே.

உக்கிரசேனன்-தரு.

உக்கிரசேனமகாராஜன் உச்சிதநடைநடந்து
சக்கரபாணியபாதங்காணவே உக்கிரசேனராஜன்
சந்தோஷமாய் வந்துமேவினார்
சத்திரபதக்காபிம்ன ராஜாதிராஜர்தான்மகிழ்க
முத்துமணிமாலையாடவே உக்கிரசேனராஜன்
முறைகரிமுன் வந்துமேவினார்
ஆலவட்டமாதர்வீச அணிபணியாய்சேனைசூழ
நீலவிழிமாதராட்டவே உக்கிரசேனராஜன்
நேசமாகவந்துமேவினார்

வட்டகுடைமேல்விளங்க மங்களசங்கீதம்பாட
கிருஷ்ணதேவர்பாதங்காணவே உக்கிரசேனராஜன்
சீருடனே வந்துமேவினார்

உக்கிரசேனன்-கவி.

ஆதிவைகுந்தாபோற்றி அனந்தசயனரேபோற்றி
சோதிமெய்ப்பொருளேபோற்றி சூக்ஷமபொருளேபோற்றி
நீதிசேருமதிவிரு பாதம்தன்னைபோற்றும்
நிதிலாவெனையழைத்த சேதியையுரைசெய்வீரே.

வசனம்.

அரிகரி ஸ்ரீமன் நாராயணா அண்டபரிபூரணா அடியேனை அழைப்பித்த விபரங்களை யின்னதென்று சொல்லும் கர்த்தனே.

கிருஷ்ணன்-கவி.

அன்னையே அனந்தாரும் அன்பாகமனமகிழ்ந்து
என்னையும்பணியும்தீதி யில்லையேஉமக்குதெண்டம்
உன்னையே அழைத்தசேதி ஒளிமுடிமகன்பட்டத்தை
மன்னவர்வணங்கப்பெற்று மதுரையையாளுவீரே.

வசனம்.

கேளும் அய்யாவே நீர் யெங்களை பெற்றவ ரானபடியினாலே யென்னைப் பணியக்கூடாது உமக்கு யிருந்தபட்டணம் உன் மகன் மோக்ஷம் சேர்ந்தபடியால் அப்பட்டத்தைதரித்து மதுராபுரியை யாண்டுவாரும் அய்யாவே.

உக்கிரசேனன்-தரு.

மகனாலேகுறவாகி மணிமுடிபெற்றதாலே
வையகம்நகைக்காதோ அரிகரிஅரியே

கிருஷ்ணன்-தரு

கைப்புச்சிடம்வராது நாங்கள் உமக்களிக்க
நல்லவசனஞ்சொன்னீர் அய்யாவே

உக்கிரசேனன்-தரு.

நீங்களிக்க அரசை நிலைபெற்றிருக்கநீதி
நேசங்கொண்டுமகிழ்ந்தேன் அரிகரியே

கிருஷ்ணன்-தரு.

மகிழ்ந்தோம்உமக்கு மணிமுடி தரிக்கவும்
வருத்தம்வேண்டாம்யென் அய்யாவே

வசனம்.

இப்படி கிருஷ்ண மூர்த்தியானவர் உக்கிரசேனராஜனை கம்சராஜன் சிம்மாதனம்யேற்றி பட்டம்தரிப்பது.

தரு.

மணிமுடி பூண்டாரே-உக்கிரசேனன் மணிமுடி பூண்டாரே
மணிமுடி பூண்டாரே மாமதுரையாள
அணி அணியாகவே அரசர்கள் புடைசூழ
சந்திரக்குடை கவிக்க நவமணிக் கெங்கேயிலங்க
இந்திரனைப்போல ஞானசேகருணை [illegible]
கவிஞர் பெரியோர் கட்டியங் கூற [illegible]
தவிர்ந்தசாரதிகள் [illegible]
மாதர்கள் [illegible] வரிசைகாட்டியமாட்ட
தோரணமகிழ்ந்திட ஜெயமங்களம்பாட (மணி)

கவி.

உலகெலாம்மகிழ்க்குந்தில்ய உந்நயமெய்ப்பகவான்வந்து
பலமுள்ளகம்ஸனுக்கு பதவியுமளித்தாயக்ஷேகம்
நலமுறும் உக்கிரசேனன் தவறில்லா பட்டங்கட்டி
நின்னுடன்வாழ்கவென்று சேர்வாம்பரவித்தாரே.

வசனம்.

அசோதெப்பா! யென்றால் பகவானாகிய கிருஷ்ணமூர்த்தி மதுரா புரிக்குவந்து கம்ஸனைமடித்து மோக்ஷம்சேரும்படி, பதனிகளோதந்து உக்கிரசேனனுக்கு மதுராபுரியை பட்டங்கட்டிவைத்து துவாரகா புரியை சேர்ந்தார் (எ-று.)

மங்களத் தரு.

மங்களம் மங்களம் சுபஜெய மங்களம் மங்களம்
மங்களம் மங்களம் வைகுந்தவாசர்க்கும்
திங்கள்முகதேவி பாஞ்சாலிக்கும் மங்களம்
அங்குசபாசர்க்கும் ஆறுமுகதேவர்க்கும்
சங்கரன் சிவகாமி சாரதாம்பாளுக்கும் மங்களம்
ஹரிகிருஷ்ணதேவருக்கும் அதியமாமருக்கும்
[illegible] விளங்குந்தேவதைக்கும் மங்களம்
[illegible]க்கும் அடியார்க்கும் மானிடர்க்கும்
[illegible] புண்ணியவான்களுக்கும் மங்களம்

857.57

வாழி-விருத்தம்.

நரியுடன் அரசர்வாழ்க அரசாசக்கன்னன்வாழ்க
வருமலர்கமலவதனி மேதினிபெருகும்வாழ்க
மனமுகலவைத்தும்வாழ்க மகிழ்ந்ததோர்நாடகத்தை
பார்மிசைபடித்தோர்கேட்டோர் பணிவுடன்மிகவாழ்வாரே.

கம்ஸ சம்மார நாடகம்

முற்றிற்று.